# 9 பாடங்களுக்கு மீண்டும் ஜி.ஸி.ஈ. பரீட்சை!

Registered as a News Paper in Ceylon விலை 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் ரெஜிடி எண் : 49
போன் : 389

மலர் 14
இதழ் 338
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 5 ஜுல்கஃ 20 திங்கட்கிழமை (18-1-71)

## மார்ச்சில் நடக்கும்

கோட்டை, ஞாயிறு

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ சாதாரண வகுப்புக்குரிய 9 பாடங்கள் கல்விப்பகுதியினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது இப்பாடங்களுக்கான பரீட்சைகள் மார்ச் மாதத்தில் நடைபெறுமெனக் கல்விப்பகுதி அறிவித்துள்ளது

பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்பே வெளியாகிவிட்டதென்ற செய்தியைத் தொடர்ந்து புலன்விசாரணை செய்த இரகசியப் பொலிசார் அறிக்கை சமர்ப்பித்தனர். இதனைத் தொடர்ந்து ஆங்கிலம். உயிரியல், பொருளாதாரம், பிரயோக கணிதம், தூயகணிதம், எண்கணிதம் புவியியல், இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் இருவர் பரீட்சைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் பரீட்சைத்தாள் வெளியானது சம்பந்தமாக தற்காலி வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

---

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறை வடக்கு கிழக்கு காரியாதிகாரி பிரிவிலிருந்து 469 வாலிபர்கள் அரசாங்க விகிதர்சேவைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# யாழ். மக்கள் அன்பைபெற்று மகாதேசாதிபதி திரும்பினார்!

மாவிட்டபுரம், திங்கள்

மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவும் அமைச்சர்களும் நேற்றுக் காலை றோயல் விமானப் படையைச் சேர்ந்த விமானங்களில் கொழும்பு திரும்பினர்

பலாலி விமான நிலையத்திற்கு மகாதேசாதிபதி சென்ற வழியினில் பாடசாலை மாணவர்கள் தேசியக் கொடி ஏந்தி வரவேற்றார்கள் சந்திகள் தோறும் பெருந்திரளான மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வரவேற்றனர்.

வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகள் வீதியின் இருமருங்கிலும் திரண்டு நின்று வரவேற்றனர். சுன்னாகத்தில் பட்டின சபைத் தலைவர் திரு பொன்னாவலிங்கம் தலைமையில் மகாதேசாதிபதிக்குவரவேற்பளிக்கப்பட்டது

மல்லாகத்தில் கிராம சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது. தெல்லிப்பளையில் யூனியன் கல்லூரி மகாஜனக் கல்லூரி மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்து நின்று மகாதேசாதிபதியை வரவேற்றனர். தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரநாதன் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது

விமான நிலையத்தில் சகல கட்சிப் பிரமுகர்களும் ஒன்றாகத் திரண்டு நின்று மகாதேசாதிபதியையும் அமைச்சர்களையும் வழியனுப்பி வைத்தனர்

### மேயர் உதவிமேயர் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று முற்பகல் கொழும்பில் நடைபெறவிருக்கும் மேயர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ் நகரமேயர் திரு. தா ச துரைராசாவும் உதவிமேயர் திரு ஆ துரைராஜசிங்கமும் நேற்று மாலை விமானத்தில் கொழும்புக்குப் பயணமானார்கள்.

## ஒற்றுமையான ஸ்ரீலங்காவை உருவாக்க உழைப்போம்’

### நேசக்கரம் நீட்டுகிறார் மைத்திரி

யாழ்ப்பாணம், திங்கள்

இயற்கையிலேயே தொழிற்திறமை பெற்ற ஒரு பரம்பரியத்தைக் கொண்டிருக்கும் யாழ். மக்களுக்கு சரியானவழியில் மின்சாரவசதி மட்டும் கிடைத்திருக்குமாயின் பல்வேறு தொழில்கள் பல்கிப் பெருகியிருப்பதோடு மட்டுமல்லாது மேலதிகமாக விவசாய குடிசைக் கைத்தொழில்களும், உருவாகி எமது தேசிய செல்வம் உயரவழி அமைந்திருக்கும் இதை தெற்கிலுள்ள மற்றெல்லாரையும்விட யாழ்ப்பாணத்துடன் மிகவும் அந்நியோன்னிய மிக்கவர் என்றவகையில் தான் நிச்சயமாக சொல்லமுடியும். வடபகுதி நீர்மின் திட்டத்துவக்கத்தை யொட்டி நீர்ப்பாசன அமைச்சரும் பதில் பிரதமருமான திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா மேற்கண்டவாறு. கூறினார்

மின்துறையில் இத்தகைய விஸ்தரிப்புகள் வேறிடங்களிலும் வெற்றிகரமாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு மார்ச்சில் 20-ந் தேதியன்று அனுராதபுரத்திலும் இந்த முயற்சி செயற்படுத்தப்பட்டது. அதிலிருந்து இந்த விஸ்தரிப்பு மஸ்கெலிய ஓயாத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டு இப்பொழுது நீரியக்கமின்சக்தி வடக்கை நோக்கி ஒளிக்கதிர்களை அள்ளிவீசுகின்ற நீரியக்கமின்சக்தியாக மாறியுள்ளது. இந்த மின்சக்தி செல்லும் வழி வவுனியா கிளிநொச்சி ஆகிய ஊர்களுடன் தொடர்பு படுத்தப்பட்டு அது செல்லும் வழியாகவும் அமைந்துளது.

யாழ்ப்பாணத்திற்கான மின்னியோகம்இதற்குமுன்னர் 14 மெ. வா. அளவில் டீசல் மூலமாக அளிக்கப்பட்டுவந்தது. இது யாழ் நகரத்திற்கும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் தேவைக்கும் போதக்கூடியதாக இருந்தது ஆனால் கைத்தொழிலில் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக அமைந்துபோயிற்று. இது துரதிருஷ்டமாகும், கிரிட் திட்டப்படியான ஒரு சிறந்த மின்விநியோகம் இருந்திருப்பின் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கக்கூடியதாக அமைந்துவிட்டிருக்கும்;

அபிவிருத்தித் திட்டங்களில் மின்சாரம் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றதென்பதை யாவரும் அறிவர். அபிவிருத்தி பெற்றுவரும் சகல நாடுகளிலும். அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளிலிருந்து வரும் உற்பத்திகளின் தரத்தோடு போட்டி போட சதா முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தளரா முயற்சிகளுக்கு உறுதுணையாக நிற்பது மின்சாரம் ஒன்றே. அதுவே முக்கியபங்கு வகித்த பொருளாதார உயர்ச்சியையும் வாழ்க்கைத் தரத்தையும் அள்ளி வழங்குகின்றன.

விவசாய அபிவிருத்தியிலும்கூட இயந்திரமயமாக்கப்போகின்ற பண்ணைகள் மூலமும் விளைச்சலை மிகுதப்படுத்தும் உரத்தின் மூலமும் மின்சாரம் உறுதுணை நிற்க முடியும். நீர்ப்பாசனத்துறை வடிகால் தண்ணீர்த்திட்டங்களுக்குக்கூட ஆக்கமும் ஊக்கமும் அளிக்க மின்சாரத்திற்குச் சக்தியுண்டு கிராமச் சுற்றுப்புறங்களில் வதிவோருக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுத்து. அவர்களை நகர்ப்புறங்களுக்குக் குடியேறச் செய்யாது அவர்கள் பிறந்த மண்ணிலேயே வளத்தைப் பெருக்குகின்ற ஒரு சந்தர்ப்பத்தையும்இந்த மின்சாரம் வழங்கமுடியும்.

நாம் சோஷலிஸ அடிப்படையில் அபிவிருத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

---

வெளிநாட்டில் கல்வி பயிலும்

## இலங்கை மாணவருக்கு அரசாங்கத்தின் அறிவிப்பு

கோட்டை, ஞாயிறு

'வெளிநாடுகளில் கல்வி கற்கும் இலங்கையர் அனைவரும் இலங்கை அரசாங்கத்துடன் 3 மாதத்திற்குள் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட வேண்டும்'. இவ்வாறு கூறும் கடிதம் வெளிநாடுகளில் கல்விகற்கும் இலங்கை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இலங்கை அரசினால் அனுப்பப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: 'நீங்கள் உங்கள் கல்வியைத் தொடர்ந்து பிறநாட்டில் பெற விரும்பினால் இலங்கையிலுள்ள உங்கள் பெற்றோர்களுக்கோ அல்லது பாதுகாவலர்களுக்கோ கல்வி அமைச்சின் பிறநாட்டு ஏஜன்ஸி பிரிவுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கவும். நீங்களும் மேற்படி ஒப்பந்தத்தை செய்வதற்கு இரு உடன்பாடுகள் தெரிவிக்க வேண்டும் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அனுப்பப்படாவிட்டால் உங்களுக்கு அனுப்பப்படும் செலாவணி உடனடியாக நிறுத்தப்படும்'.

வெளிநாடுகளிலுள்ள மாணவர்கள் தங்கள்படிப்பு முடிந்ததும் இலங்கை அரசின் கீழ் எட்டு ஆண்டுகளுக்கு கட்டாய சேவை புரிய வேண்டும் அல்லது பெருந்தொகையான பணம் நஷ்ட ஈடு கட்ட வேண்டும் என்று தெரிய வருகிறது.

---

## ஸ்ரீமாவுக்கு கயானா எதிர் கட்சித்தலைவர் பாராட்டு

ஜியோஜ்ரவுன், ஜன. 17

சிங்கப்பூரில் நடைபெறும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில், இனத்துவேஷக் கொள்கைக்கு எதிராகப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பேசிய பேச்சினைப் பாராட்டியுள்ளார் கயானா எதிர் கட்சித் தலைவர் ஹெடி ஜாக்சன்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தென் ஆபிரிக்கா, ரொடீசியா போன்ற நாடுகளில் நடைபெறும் இனவெறிகளுக்கு உரிய நேரத்தில் விடுவிக்கப்பட்ட எச்சரிக்கையாக ஸ்ரீமாவோவின் பேச்சு அமைந்துள்ளது என்றார்.

சிங்கப்பூர் மகாநாட்டில் சாம்பியா ஜனாதிபதி கெனத் கவுண்டா ஆற்றிய உரையையும் அவர் பாராட்டியுள்ளார்.

---

தியேட்டர் எறிகுண்டுச் சம்பவம்

## சந்தேக நபர்களுக்கு தொடர்ந்து ரிமாண்ட்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் நகரிலுள்ள படமாளிகை யொன்றில் கைக்குண்டு வீச்சு சம்பந்தமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ கன்ரனி. சந்தேக நபர்களுக்கு எதிராக சாட்சியங்களில்லாதபடியினால் அவர்களைப் பிணையில் விடும்படி கோரினார். இச்சம்பவம் சம்பந்தமாக இன்னும் சில சந்தேக

(8-ம் பக்கம் பார்க்க)

# 'அறியாமை என்ற கொடிய நோய்க்குமருந்து கல்வி'

தாவடி, ஞாயிறு

"மனிதனிடமுள்ள அறியாமை எனப்படுகின்ற கொடிய நோயை நீக்கவல்லது கல்வியாகும் எழுத்தறிவித்தவன் இறைவனுவான் என்பதுபோல, மனிதனுக்கு கல்வியூட்டும் நிலையங்களில், நூல் நிலையமும் முக்கியமானதொன்றாகும். நூல் நிலையத்தை நன்கு பேணிப் பாதுகாத்து வளர்ப்பது நன்மக்களின் கடமை உளத்துக்குக் கல்வி எப்படியோ அதேபோல உடலுக்கு விளையாட்டு அவசியம். நமது கலை, கலாச்சாரப் பண்பாட்டை நாடகங்கள் மூலம் நன்கு வெளிப்படுத்தலாம். எனவே கல்வி, விளையாட்டு, நாடகக்கலை போன்றவற்றை நூல் நிலையங்கள் மூலமாகவும் பரப்புதல் நன்று ஒவ்வொரு கிராமங்களிலும் நூல் நிலையங்கள் அமைந்திருக்க வேண்டும் அவற்றால் ஒப்பற்ற அறிவு வளர்ச்சிபெற முடியும்"

இவ்வாறு தாவடி மத்திய சன சமூக நிலைய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த கூட்டத்தில் கலந்து தலைமைவகித்து உரையாற்றிய திரு. எஸ். எஸ். செல்வரத்தினம் கூறினார்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி செல்வரத்தினம், செயலாளர்: திரு க இராசரத்தினம், பொருளாளர்: திரு அ த அ கமலநாதன், நூல்நிலையப்பொறுப்பாளர்: திரு எஸ் ஆர் சரவணபவன், விளையாட்டுக் கழகத் தலைவர்: திரு அ கமலநாதன், நாடகமன்றத் தலைவர். திரு. கே இராசரத்தினம், செயலாளர்: திரு ஏ எஸ் கனகநாயகம், தனாதிகாரி: திரு வை குணநாதன்.


REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m,
Poya days 4 shows
Frederick Stafford
In
THE BATTLE OF
EL ALAMEIN



வெஸ்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 3 காட்சிகள்
விஜயன் - ஜெயலலிதா
நடித்த
ஸி. ஐ. டி. - 116
(புதிய தமிழ் வெளியீடு)



கடைசி வாரம்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள். போயாநாட்களில் 4 காட்சிகள்
ஏசுநாதர் - தமிழ்
இப்படத்துடன்
அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லாக்காட்சிகளிலும் காண்பிக்கப்படும்



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு)



சிவாஜி -
...ஞ்சனு
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
சிவந்த மண்
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

கடைசி வாரம்
கிங்ஸ்லி 2-00, 6-00, 9 30
ஏ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ
சிவகுமார் நடித்த
அன்னையும் பிதாவும்


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## திங்கள் 18—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ் தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அல்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 குரல்வகை.

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4-45 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 6-45 வீட்டு வைத்தியம், 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 குறள்இசை, 8-00முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

— —

# இடமாற்றம்

வேலணை, ஞாயிறு

வேலணை செட்டிபுலம் அரசினர் பாடசாலை தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். அமிர்தலிங்கம் மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.


ஸ்ரீகடலிங்கன்
இணுவில்
திவசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - கே. ஆர்விஜயா
நடித்த
திருடன்


# இன்று 'செங்கதிர்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறை செங்கதிர் செல்வர் கல்விச் சேவையினரின் கலை இலக்கிய விஞ்ஞான சஞ்சிகையான 'செங்கதிர்' மாத இதழ் வெளியீட்டு விழா இன்று மாலை 4-30 மணிக்கு கொழும்புத்துறை செங்கதிர் செல்வர் கல்விச்சேவை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு சி. ஜே. இளயதம்பி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வெளியீட்டு விழாவில் திரு. ஹன்டி பேரின்பநாயகம் சஞ்சிகையின் முதற் பிரதியை வாங்குவார். திரு. சி. சுதந்திரராஜா இச்சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராவார்.

— —

# பெற்றோர் சங்க நிர்வாகிகள்

ஊரைதீவு, ஞாயிறு

நாரந்தனையில்அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள பெற்றோர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஜேம்ஸ்நீக்கலாஸ், செயலாளர் வ. மனுவேல்பிள்ளை, பொருளாளர் திருமதி ஸ்ரெல்லா போல்பிள்ளை.

நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# ஊர்வலம்

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் மத்திய கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அழகிய தேர் செய்து அலங்கரித்து மார்கழிமாதம் பூராவும் வணங்கிய பிள்ளையார் உருவங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஊர்வலமாக எடுத்துச்சென்றனர் மிருதங்கம் சேமக்கலம் சங்குகள் முழங்க முளாய் வீதிவழியாக பொன்னாலைக் கடலில் பிள்ளையார் உருவங்களைப் போட்டனர்.


ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு



மனோகரா- யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 10-30 மெற்னி



ராஜ்குமார் - ராதிகா - ஜோதிலட்சுமி
நடித்த
ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999



வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்


# வரிவிளம்பரம்

## தேவை

வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. 20—22-1-71ந் திகதிகளில் காலை 9—12 மணிக்கு நேரில் வரவும். மொடேர்ன் பிளாஸ்ரிக், வேம்படி மகளிர்கல்லூரி முன்பாக, நம். 4 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2660

## விற்பனைக்கு

முத்திரை ஆல்பங்கள்:

உங்களுக்குத் தேவையான ஹீரோ ஸ்டாம்ப் பெக்கட்கள், ஆல்பங்கள் மற்றும் தேவையானவற்றை கீழ்க்கண்ட இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ லங்கா புத்தகசாலை, E. A. ஸ்டேசனர்ஸ், இஸ்மாயில் ஜீ அமீஜீ (E. A. பாய்ஸ்), பஸ்தியாம்பிள்ளை. 2661

மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மேன்ஸ் பாடசாலைக்கும் மத்தியிலும், அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அண்மையிலும் சந்தை, தபால் கந்தோர் அருகில் உண்டு. விபரங்களுக்கு: ஐ. தியாகராசா, மே/பா பொன்னுச்சாமி, டச்சு ரேட் உடுவில், சுன்னாகம். 2656

EL 2500 சிரிஸ் இலக்கமுடைய சோமசெற் கார் நல்ல நிலையில உடன் விற்பனைக்குண்டு. யோட்ச் யேசரெட்ணம், (எலக்ரீஸன்) இராசாயனத் தொழிற்சாலை, பரந்தன், கிழமை நாட்களில் வேலைநேரங்களில் தொழிற்சாலையில் பார்வையிடலாம். 2652

காணி:

சுந்தர்மடம் - 3 கட்டிடத் துண்டுகளாகப் பிரிக்கக் கூடிய 5 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் பழம் ரோட்டு முகப்பில் விற்பனைக்குண்டு. C சிவப்பிரகாசபிள்ளை, மருதனுமடம், சுன்னாகம் 2651

## கல்வி

சிறுவர் வகுப்புக் கான விசேட பயிற்சிபெற்ற (First Class Trained) இளைப்பாறிய தலைமை ஆசிரியையின் நேரடியான மேற்பார்வையில சிறுவர் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. சில வெற்றிடங்களே உள்ளன. விண்ணப்பிக்கவும். திருமதி. ஜி. எம். செல்வத்துரை, 45, பலாலி வீதி, கந்தர்மடம். 2653

## ரியூசன்

சிங்களம்:

பத்து வருஷ அனுபவமுள்ள ஆசிரியையால் தமிழ் மூலம் சிங்களம் வார இறுதி நாட்களில் மாணவர்களுடைய நேரத்திற்கேற்ப கற்பிக்கப்படும். 383 A, நாவலர் வீதி, நல்லூர். 2663

# வித்தியாதிபதியிடம் கோருவர்

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அல்லது புலோலி ஆண்கள் இந்துக் கல்லூரியில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு வசதிகள் செய்துதரவேண்டுமென்றும் கனிஷ்ட பாடசாலைகளில் 8-ம் வகுப்பு வரை விஞ்ஞானப்பாடங்களைப் படிப்பிக்க வசதிசெய்து தரவேண்டும் என்றும் பருத்தித்துறைப் பகுதிப் பெற்றோர் எதிர்வரும் 18-ம் திகதி வடமாநில வித்தியாதிபதியைச் சந்தித்துக் கோரவிருக்கின்றனர்.

# இந்தியத் தேர்தல்

# வாக்காளர் அச்சுறுத்தப்படுவதை தவிர்க்க புதிய முறை

# அபேட்சகர்கள் செலவுத் தொகையும் அதிகரிப்பு

புதுடில்லி, ஜன. 17

இம்முறை இந்தியாவில் நடக்கவிருக்கும் தேர்தலில் வாக்காளர் அச்சுறுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக புதியமுறைநடைமுறைப்படுத்தப்படுமென பிரதமதேர்தல் அதிகாரி திரு. சென்வர்மா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இதுவரை காலமும் இருந்துவரும்தேர்தல் வாக்குச் சீட்டுக்கள் எண்ணும் முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியது மிக அவசியமாகவுள்ளது என்று தலைமை தேர்தல் அதிகாரி திரு. சென்வர்மா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- வாக்களிப்பு முடிந்ததும் வாக்குச் சாவடிகளின் முறையிலேயே வாக்குகள் எண்ணப்பட்டுவந்தன. இதனால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி, தனக்கு எந்தச் சாவடியில் வாக்குகள் பதிவாகியிருக்கின்றன; எந்தச் சாவடியில் குறைவாக பதிவாகியிருக்கின்றன என்பதை அறிந்து, தனக்கு வாக்களிக்காத பகுதியிலுள்ள மக்களை அச்சுறுத்த ஏதுவாகும். ஆகையினால் இம்முறைமாற்றப்பட வேண்டும். இம்முறைவாக்குகள் எண்ணப்படும்பொழுது ஒரு தொகுதியிலுள்ள எல்லா வாக்குச் சாவடிப் பெட்டிகளிலுள்ள வாக்குகள் அத்தனையையும் ஒருபெட்டியில் போட்டுக் கலந்தபின்பே பிரித்து எண்ணப்படவேண்டும். இதனால் மக்கள் அச்சுறுத்தப்படுவதினின்றும் தவிர்க்க முடியும் என்றார்.

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் செலவுத் தொகையும் இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. லோக்சபைத்தேர்தலுக்கு ஒரு அபேட்சகர் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து ஆரயிரம் ரூபா வரை செலவு செய்யலாம். சட்டசபைக்குப் போட்டியிடும் அபேட்சகர்செலவு தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது

நாகலாந்து சட்டசபைக்குப் போட்டியிடும் ஒருவர் 2ஆயிரத்திலிருந்து 2500 வரையும், தமிழ்நாடு சட்டசபைக்குப் போட்டியிடுபவர் 8 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் வரையும். மேற்கு வங்காளத்தில் 7ஆயிரத்திலிருந்து 14500 ரூபாவரையும் செலவு செய்யலாம் மற்ற ராஜ்யங்களில் முன்பிருந்த தொகையையே ஒரு அபேட்சகர் செலவு செய்ய முடியும்

## சில்லி அதிபரைக் கொல்லச் சதி

சாந்தியாக்கோ, ஜன. 17

சில்லி நாட்டின் அதிபர் திரு. அலண்டே தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

அதிபர் அலண்டே மந்திரி சபைக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக புறப்பட்டுச் செல்லும் சமயம், அலண்டேயின் மாளிகையில் டைனமைட் குண்டு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

திரு அலண்டே இடதுசாரியாகும் இவரைக்கொல்ல கடந்த நவம்பர் மாதம்இரு முறை முயற்சிகள் நடைபெற்றன அதிலிருந்தும் அதிபர் தப்பித்துக்கொண்டார்.

## புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, ஞாயிறு

மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 10-1-71 ஞாயிற்றுக் கிழமை தலைவர் திரு. வே. யேசுதாஸன் தலைமையில், மோகனதாஸ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே கிருஷ்ணன், உபதலைவர்: திரு மு. சிவராசா, செயலாளர்: திரு க. முருகேசு, உபசெயலாளர்: திரு க. சுப்பையா, தனாதிகாரி: திரு க இராசா, உபதனாதிகா க. சின்ராசா, நூலகச் செயலாளர்: திரு. ப கிருஷ்ணன், கலைக்கழகச் செயலாளர்: திரு. வெ யேசுதாஸன், உபகலைக்கழகச் செயலாளர்: திரு. அ. இராஜலிங்கம், விளையாட்டுக் கழகச் செயலாளர்: திரு. க பொன்னுத்துரை, உபவிளையாட்டுக் கழகப் பொறுப்பாளர்: திரு கா. அமிர்தலிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு.வே சின்னத்தம்பி

## இந்து சமுத்திரத்தில் பிரிட்டனின் ராணுவத்தளம்

### பிராவடா கண்டனம்

மாஸ்கோ, ஜன. 17

இந்திய கடலிலும், தென்கிழக்காசியாவிலும் தங்கள் நிலைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அமெரிக்காவும், பிரிட்டனும் இங்களையும், கூட்டுகளையும் அமைத்து வருகின்றன, திய கடலில் இராணுவ முன்தீப்புகளுக்கான திட்டம் வகுத்து வருகின்றன இராணுவதள என்று 'பிராஸ்தா'வில் வாலந்தின் கோரோவிகோஸ் எழுதியுள்ளார். சிங்கப்பூர் காமன்வெல்த் பிரதமர்களின் மாநாடு பற்றி எழுதுகையில், பிரதமர்கள் கூட்டத்திற்குச் சிறிது காலம் முன்னர், பிரிட்டன் ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, மலேசியா சிங்கப்பூர் ஆகிய ஐந்து நாடுகளின் இராணுவ நிபுணர்களும் சிங்கப்பூரில் கூடி புதியதொரு இராணுவ ஒப்பந்தத்திற்கான திட்ட விவரங்களை விவாதித்தது தற்செயலான நிகழ்ச்சி அல்ல என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்தக் கூட்டணியில் நவீன காலனியாதிக்க வாடை வீசுகிறது மலாக்கா ஜலசந்தியிலிருந்து நன்னம்பிக்கை முனையைச் சுற்றியுள்ள கடல் வர்த்தகப் பாதைக்கு சோவியத் யூனியனால் ஆபத்து விளையும் என்ற அசாதாரண ஹேஷ்யத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கூட்டணியின் அவசியத்தை விளக்க முற்படுகிறது பிரிட்டன். ஆனால் இத்தகைய புதிய இராணுவ அணியைத் தோற்றுவிக்கும் திட்டத்தின் உண்மையான காரணம் ஏகாதிபத்திய சக்திகளின் எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டன் அமெரிக்காவின் பொருளாதார இராணுவ நலன்கள் அங்கு பொதிந்து கிடப்பதேயாகும் என்று அக்கட்டுரை கூறுகிறது. தென்கிழக்கு மேற்கு ஆசியாவில் பிரிட்டிஷ் நிறுவனங்கள் ஆண்டு தோறும் 40 கோடி பவுன் லாபத்தைப் பெற்று வருகின்றன என்பதை நினைவு கூர்வதே போதுமானது.

காமன்வெல்த் பிரதமர்கள் கூட்டத்தின் போது அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளரான லெயாட்டும் சிங்கப்பூரில் தங்குவதைச் சுட்டிக் காட்டி இந்தோ சீன யுத்தத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குவதே அதன் நோக்கம் என்று கோரோவிகோஸ் கூறியுள்ளார்.

தென். ஆபிரிக்காவிற்கு

## பிரிட்டனின் ஆயுத விற்பனை

### ஐ. நா. தடையைப் பலவீனப்படுத்தும்

லண்டன். ஜன. 17

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள் கொடுப்பதினால் தென்னாபிரிக்கா மீதுஐக்கிய நாடுகள் விதித்த தடையின் வலுக்குறைந்துவிடும்.

இவ்வாறு ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தன்சானியா அதிபர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் தென்னாபிரிக்காமீது விதிக்கப்பட்ட தடையையும் பொருட்படுத்தாது பிரான்சும் சில வகையில் தென்னாபிரிக்காவிற்கு உதவி வருகிறது. இந்நிலையில் பிரிட்டனும் மட்டமான அளவில் கூட தென்னாபிரிக்காவிற்கு ஆயுதம் வழங்கிவருமானால் ஐ! நா.வின் தடை மேலும் வலுக்குன்றிவிடு மெனவே. பிரிட்டன் ஆயுதம் வழங்குவதுபற்றிதிர்க்கமாக ஆலோசிக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

## கிங்கின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டது

வாஷிங்டன், ஜன. 17

நீக்ரோக்களின் மனிதஉரிமைக்காகப் போராடிய தலைவர் மார்டின் லூதர்கிங்கின் 42வது பிறந்ததினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

1929ம் ஆண்டு ஜனவரி 15ந் திகதி பிறந்த இவர் சமாதான நோபல் பரிசு பெற்றார். 1968ம் ஆண்டு ஏப்ரல் 4ந் திகதி இன வெறியன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## அமெரிக்கச் சிறைச்சாலைகளில் இடநெருக்கடி

வாஷிங்டன், ஜன. 17

நாடுபூராவிலுமுள்ள சிறைச்சாலைகள்பதிவுபற்றிய தகவல் இங்கு வெளியாகியுள்ளது.

ஆரம்ப தடுப்பு நிலையங்கள்போன்றவைபோக அமெரிக்காவில் 4,037 சிறைச்சாலைகள் உள்ளன. என்று நீதித்திணைக்களம் வெளியிட்டுள்ள விபரம் கூறுகிறது.

1970 மார்ச் 15ந் திகதி அமெரிக்க சிறைகளில் 160,863 பேர்கள் இருந்தனர்.

இவர்களில் 52 சதவீதத்தினர் விசாரணைக்கு காத்திருப்பவர்களாகும்.

சிறைச்சாலைகளில் இடநெருக்கடி காரணமாக விசாரணைக் கைதிகள் மாதக்கணக்கில் அவஸ்தைப்பட நேர்கிறது என்று 'டைம்' சஞ்சிகை கூறுகிறது.

இவர்களில் ஐந்தில் நால்வர் பிணையில்விடுதலைசெய்ய தகுதிவாய்ந்தவர்கள். ஆனால் ஜாமீன் தொகையை கட்டமுடியாத காரணத்தினால் சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றனர் எனத் தெரிகிறது.

## பஸ் மோதி மரணம்

மாத்தறை, ஞாயிறு

46 வயதுடைய ஏ சுந்தரம் என்பவர் அக்குரஸ்ஸ-மாத்தறை பிரதான வீதியில் இ. போ. ச. பஸ்ஸினால் மோதுண்டு மரணமானார்.

தீவிர வாதிகளால்

## கடத்தப்பட்ட சுவிஸ் தூதுவர் விடுதலை

பிரேசிலியா (பிரேசில்) ஜன. 17

பிரேசில் நாட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சுவிற்சர்லாந்துத் தூதுவர். திரு. பூக்கரை தீவிரவாதிகள் விடுவித்துள்ளனர்.

தன்னைக் கடத்தல்காரர்கள் தம்மைச்சிறந்த முறையில் உபசரித்தார்கள் என்றும் தான் நல்ல சுகத்துடன் இருப்பதாகவும் அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

கடந்தபல நாட்களுக்கு முன் பிரேசிலில் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் 70 தீவிரவாதிகளையும் விடுவிப்பதற்காக சுவிற்சர்லாந்துத் தூதுவரை இத்தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். இவ்விஷயத்தில் கண்டிப்புடன் இருந்த பிரேசில் அரசாங்கம் முடிவில் 70 தீவிரவாதிகளையும் விடுதலை செய்தது. இதன்பின்பே தூதுவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கான்பராவிலுள்ள

## சோவியத் தூதரகத்தில் வெடி விபத்து

கான்பரா, ஜன. 17

ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பராவிலுள்ள சோவியத் தூதரகத்தில் வெடிகுண்டு வெடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிகுண்டு விபத்தினால் தூதரக ஜன்னல் கண்ணாடிகளும் வேறுசில பகுதிகளும் சேதமடைந்துள்ளன

இவ்வெடிகுண்டு விபத்திற்கு முன்பாக, ஐரோப்பிய யூதர் பாதுகாப்பு நிறுவனம் என்று சொல்லப்படும் ஒரு பகுதியினர் தூதரக அதிகாரிகளையும் ஊழியர்களையும் பயமுறுத்தியதாகவும், இவ்வெடிவைப்புச் சம்பவம்இந்நிறுவனத்தாரின் செயலாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

ஐரோப்பிய பொதுச்சந்தை விவகாரம்

## சாம்ராஜ்ய நாடுகளுடன் பிரிட்டன் பேச்சு நடத்தும்

லண்டன், ஜன. 17

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் பிரவேசிப்பது சம்பந்தமான பேச்சுக்களை நடத்தவிருக்கும் தூதுகோஷ்டிக்கு தலைமை தாங்கும் பிரிட்டிஷ் அமைச்சரான திரு. ஜியோபிரே ரிப்பன் இவ்விடயம் குறித்து சாம்ராஜ்ய அங்கத்துவ நாடுகளுடன் கலந்தாலோசனை நடத்தவிருக்கிறார்.

திரு. பிப்பன் அடுத்த மாதம் கரேபியன் பிராந்தியத்திலுள்ள சாம்ராஜ்ய நாடுகளுக்கு விஜயம் செய்து பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர்ந்து கொள்வதால் எழும் வர்த்தகப் பிரச்சனைகள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவார். கரேபியன் பிராந்திய நாடுகளான பார்படோஸ், கானா ஜமேக்கா ரினிடாட் ஆகியனவற்றிற்கு விஜயம் செய்யும் அவர் இந்நாடுகளில் இருவாரங்கள் வரை தங்கியிருப்பார். சென் லூசியாவுக்கும் விஜயம் செய்து இந்நாடுகளின் பிரதமர்களை அங்கு சந்தித்துப் பேசுவதற்கு அவர் திட்டமிட்டிருக்கிறார்.

திரு. ரிப்பன் ஏற்கனவே ஹொங்கொங் ஆவுஸ்திரேலியா நியுஸிலந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து ஐரோப்பிய பொதுச்சந்தை விவகாரம் குறித்து அங்கு பேச்சுக்களை நடத்தியுள்ளார். கரேபியன் நாடுகளில் தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு கனடாவுக்கும் இவர் விஜயம் செய்வார்.

## மணிவாக்கு

அறியாமை இருட்டிலே மூழ்கி ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவனை விட அறிவுள்ள மனிதனாக ஒருநாள் வாழ்பவனே மேலானவன். — புத்தர்.


# ஈழநாடு

Eelanadu Kandon Jaffna Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் தை மாதம் 5-ம் திகதி 18-1-71


## பரீட்சைகள்

நடந்து முடிந்த ஜீ. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிய பல மாணவர்கள் மீண்டும் சில பாடங்களுக்குப் பரீட்சை எழுதவேண்டிய நிர்ப்பந்தம் சில பொறுப்பற்ற, மனிதாபிமானமில்லாதவர்களால் ஏற்பட்டிருக்கிறது. பரீட்சைக்கு முன்னரே சில பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் வெளிவந்தன. இந்த வினாத்தாள்கள் வெளியானது உண்மைதானா என்பது பற்றியும் எப்படி வெளிவந்தன என்பது பற்றியும் ஆராயப்பட்டன. இரண்டு பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் வெளியானது உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த இரு பாடங்களுக்கும் மறு பரீட்சை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டது. இதர சில பாடங்களின் வினாத்தாள்களும் வெளியாகிவிட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றியும் விசாரணை நடைபெற்றது. இதன் பயனாக இவ்வருடம் மார்ச் மாதத்தில் ஒன்பது பாடங்களுக்கு மீண்டும் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வினாத்தாள்கள் எப்படி வெளிவந்தனவென்பது பற்றியும் இந்தத் துரோகச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யார் என்பதையும் கண்டுபிடித்து அவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

இம்முறை மட்டும்தான் வினாத்தாள்கள் முன்னதாகவே வெளிவந்தனவென்று சொல்லமுடியாது. இதற்கு முன்னரும் இவ்வித சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தமாதிரி எதுவும் நடைபெற்றுவிடக்கூடாதென்பதற்காக பரீட்சைப் பகுதியினர் இயன்றளவு 'கம்பியூட்டரின்' உதவியைப் பயன்படுத்தியதுடன் மிக விழிப்புடன் ஒழுங்குசெய்திருந்தனர். ஆனாலும் அவர்கள் நம்பிக்கைவைத்த மனிதர்கள்தான் மோசடிசெய்துவிட்டனர்.

முன்னர் சில பரீட்சைகளுக்கு வினாத்தாள்கள் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு இங்கு அனுப்பப்பட்டன. விடைகளும் அங்கேயே பரிசீலனை செய்யப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப்பட்டன. பிரச்னைகள் எழுந்ததில்லை.

நம் நாட்டில் என்னதான் 'சுதேசியம்' பேசினாலும் "யாரைத்தான் நம்புவதோ?" என்ற நிலைதான் இருக்கிறது. மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் மறுபரீட்சைக்குரிய வினாத்தாள்கூட முன்னதாகவே வெளிவரமாட்டாதென்பது என்ன நிச்சயம்? ரூபாய்த்தாள்கள் வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்டது போல இந்த ஒன்பது பாடங்களுக்குரிய வினாத்தாள்களும் வெளிநாட்டில் அச்சடிக்கப்படுமா?

வினாத்தாள்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து பரீட்சைப் பகுதியை மாற்றியமைக்க வேண்டுமென்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டது.

'தலைவலிக்குத் தலையணையை மாற்றுவது' போன்றதுதான் இந்த யோசனை. பரீட்சைப்பகுதியை மாற்றியமைப்பதால் பிரச்னைகள் தீர்ந்துவிடமாட்டா. பரீட்சை முறையையே மாற்றியமைக்கவேண்டியது அவசியம். ஆண்டுக்கொரு தடவை பரீட்சை எழுதி அதிக புள்ளிகள் பெறும் மாணவன்தான் கெட்டிக்கார மாணவன் என்று கணிப்பது சரியான முறையாகத் தோன்றவில்லை. இதுதான் சரியான முறையாக இருந்தால் கேள்வித்தாள்களை முன்னதாகப் பெறும் வாய்ப்புக் கிடைக்கும். ஒருசில மாணவர்களும் (அவர்கள் விஷயத்தை வெளியிடாமல் இரகசியத் திருட்டை காப்பாற்றிக் கொண்டால்) ஒருவருக்காக இன்னொருவர் ஆள்மாறாட்டம் செய்யும் மாணவர்களும்தான் கெட்டிக்கார மாணவர்களாவார்கள். வருடம் முழுவதும் கஷ்டப்பட்டு கண்விழித்துப் படித்து வகுப்பில் ஆசிரியர்களிடம் 'கெட்டிக்காரன்' என்று பாராட்டுப்பெற்ற மாணவன் மட்டரகமாகிவிடுவான்.

பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும் அதே சமயம் பரீட்சை முறையையே மாற்றியமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

# அரசாங்கமே இனி மருந்துவழங்கும்

கோட்டை, ஞாயிறு

உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு வேண்டிய மருந்து வகைகளை இவ்வாண்டு முதல் அரசாங்கமே வழங்கவுள்ளதாகத் தெரிகிறது. தனிப்பட்ட மருந்து விற்பனையாளர்களிடமிருந்து எவ்வித மருந்தையும் உத்தரவு இல்லாமல் கொள்வனவு செய்யவேண்டாம் எனச் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அரசாங்கம் அறிவித்துள்ளது

## கி. ச. தலைவர்கள் தேர்தல்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பனங்காமம், முசலி வடக்கு, அடம்பன், உயிலங்குளம், திருக்கேதீஸ்வரம் ஆகிய கிராமசபைகளின் தலைவர் தெரிவு இம்மாதம் 16-ந் திகதி தொடங்கி இவ்வார இறுதி வரை நடைபெறவிருக்கின்றது. இந்தக் கிராமசபைகளில் சிலவற்றில் இம்முறை தலைவர் தெரிவில பலந்த போட்டி காணப்படுகிறது.

# யாழ்ப்பாண மக்களின் [...]

# திணறினர் மக[...]

## சென்றவிட[...]

## சிறப்பான வ[...]

சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக ஆடம்பரமான வரவேற்புகள் யாவும் கைவிடப்பட்டனவென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவாவிற்குஇதுவரை காலமும் வடபகுதியில் எவருக்கும் அளிக்கப்படாதவிதத்தில் மிக, மிக ஆடம்பரமான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பாரத ஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பிலும் பார்க்க கூடியதாக இந்த வரவேற்புகள் அமைந்திருந்தன.

அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா கொழும்பில் கூடிய வடபகுதி தமிழ் எம். பிக்களின் மகாநாட்டில் மகா தேசாதிபதியின் விஜயம் பற்றி தெரிவித்தார்.

இம் மகாநாட்டில் மகா தேசாதிபதியின் வடபகுதி நிகழ்ச்சிகள் பற்றி தெரிவிக்கப்பட்டது. இம்மகாநாட்டின் முடிவின்படிதான் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என மந்திரிசபை தீர்மானித்ததை தொடர்ந்து மகா தேசாதிபதிக்கு வடபகுதியில் ஆடம்பரமான வரவேற்பு வைபவங்கள் கைவிடப் பட்டன என்று அரசாங்க அதிபர் கூட்டிய மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே தீர்மானித்தபடி மகா தேசாதிபதி வரும் வழியில் நான்கு இடங்களில் அந்தந்த தொகுதி எம். பிக்கள் வரவேற்பு அளிப்பதும் கைவிடப்பட்டதாக இம்மகாநாட்டின் பின் அறிவிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் கூட்டிய மகா நாட்டில் செய்த முடிவுகள் பின்னர் கடைசி நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டு மகா தேசாதிபதி வந்து செல்லும் வழிகளில் 15 இடங்களில் வரவேற்பு அளிப்பதென்றும் சில இடங்களில் எம். பி. கள் தலைமையில் வரவேற்பு அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதன் பின்னர் தான் ஒவ்வொரு கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு மகா தேசாதிபதிக்கு வரவேற்பு அளிக்க முற்பட்டன.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை சேர்ந்த சமசமாஜ கட்சி, சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை கூட தனித்தனியாகவே மகா தேசாதிபதியை வரவேற்றன.

ஆரியகுளம் சந்தியில், யாழ் சுதந்திரக் கட்சிகிளையினர், சிகரம் அமைத்து மிகவும் ஆடம்பரமான முறையில் வரவேற்றனர். இதே போன்று மாநகரசபைக்கு முன்பும் அழகான சிகரம் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. பலாலி விமான நிலையத்திலும் பெரிய சிகரம் [...]

- நமது நிருபர் [...]

ஒன்று கட்டப்பட்டி[...] மற்றும் பல இட[...] வரவேற்பு பந்தல்க[...] க்கப்பட்டிருந்தது.

மகா தேசாதிபதி[...] த்தையொட்டி ப[...] விமான நிலையம்முத[...] கவுஸ் வரை சந்தி[...] வரவேற்பு பந்தல்க[...] லாம் அலங்காரமா[...] டனை செய்யப்பட்டி[...] என்றுமில்லாதவாறு[...] நிலையத்தில் மக்க[...] ளம் திரண்டிருந்த[...] கட்சியி[...] எவ[...]

# இலங்கையின் மின்சக்[...]

# அபிவிருத்தி

— எஸ். ராஜதேவா —

( யாழ். பிரதேச மின்சார பொறியியலாள )

யாழ் குடாநாட்டிற்கு மஸ்கெலியா ஓயா திட்டத்தின்கீழ் கிடைக்கும் மின்சார விநியோகத்தை மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா சென்ற சனிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவில் நீர்ப்பாசன மின்சார, நெடுஞ்சாலை அமைச்சரும் பதில் பிரதமருமான திரு மைத்திரிபால சேனநாயக்கா உட்பட மற்றும் சில அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள் இச் சமயத்தில் பொதுவாக இலங்கையின் மின்சார அபிவிருத்தி பற்றியும் சிறப்பாக யாழ் குடாநாட்டின் மின்சார அபிவிருத்தி பற்றியும் ஆராய்வது பொருத்தமாகும்.

### மின்சக்தி உற்பத்தியின் ஆரம்பம்

1895-ம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் மின்சக்தி விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் தலைநகரான கொழும்பில் இவ் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது. தலைநகருக்கு ஒளியேற்றும் முகமாக இம் மின்சக்தி விநியோகம் தனியார் கம்பனி ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான மின்சக்தி உற்பத்தியந்திரம் காஸ்வேர்க்ஸ் வீதியில் அமைக்கப்பட்டது. தற்போது இந்த வீதியிலேயே தற்போதைய புறக்கோட்டை மின்சக்தி நிலையம் அமைந்திருக்கிறது.

1896-ம் ஆண்டு இந்தக் கம்பனி டிராம்வண்டிப் போக்குவரத்தையும் நகரில் ஆரம்பித்தது. 1902-ம் ஆண்டு கொழும்பு மின்சார டிராம் போக்குவரத்து வெளிச்சத்துக்கு மின்சாரம் வழங்கும் கம்பனி என்ற நிறுவனம் 1927-ம் ஆண்டு அரசாங்கம் மின்சார விநியோகத்தைப் பொறுப்பேற்கும்வரை நகருக்கு வெளிச்சமளித்தலையும் டிராம் போக்குவரத்தையும் கவனித்து வந்தது. அரசாங்கம் மின் உற்பத்தி விநியோகம் ஆகியவற்றைப் பொறுப்பேற்று அதற்கென ஒரு தனி இலாகா அமைக்க விருப்புக் கொண்டு 1927-ம் ஆண்டு இவ் விருப்பத்தை அரசாங்கம் நிறைவேற்றியது. மேற்படி நிறுவனத்தை அரசாங்கம் உடமையாக்கிக் கொண்டது. மின் விநியோகத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும்வேளையில் அநேகமான யந்திரங்கள் நேரடி மின்சார உற்பத்தி யந்திரங்களாகவேயிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மின்சார இலாகாவின் உதயம்

அரசாங்கம் மேற்படி கம்பனியின் வேலைகளைப் பொறுப்பேற்றதும் திரு பி. ஜீ. டி கிளான்விடி என்பவரை மின்சார வேலைகளுக்கு அதிபராக நியமிக்கத் தீர்மானித்தது.

அதேவேளையில் பொது வேலைகள் இலாகாவின் மின்சாரப் பிரிவையும் அரசாங்க மின்சார வேலைகள் இலாகாவுக்கு மாற்ற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. திரு டி கிளான்விடி பௌஸ்ரெட் சகோதரர்களிடமிருந்து மேற்படி நிறுவனத்தைப் பொறுப்பேற்றார். இப்புதிய மின்சார இலாகாவின் உதவிப் பிரதம பொறியியலாளராக திரு டி. ஜே விமலசுரேந்திரா நியமிக்கப்பட்டார்.

1901-ம் ஆண்டில் கண்டி நகரத்திற்கு 'கொழும்பு காஸ் அன்ட் வாட்டர் கம்பனி' என்ற நிறுவனத்தால் மின்சாரம் வழங்கப்பட்டது. 1922-ம் ஆண்டுகண்டி மாநகரசபையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1912-ம் ஆண்டு நுவரெலியாவிற்கு அரசாங்கத்தினால் மின்சாரம் விநியோகிக்கப்பட்டது.

1927-ம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டின் சகல மின்சார திட்டங்கள் யாவும் அரசாங்கத்தின் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தின்கிழ் கொண்டு வரப்பட்டன.

### 1வது நீராவி உற்பத்தி நிலையம்

1929-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் திகதி வெல்லம்பிட்டியாவில் முதலாவது நீராவி உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. இந் நிலையத்திற்கு அப்போது கவர்னராகவிருந்த சேர் ஹேர்பேட் ஸ்ரான்லியின் பெயர்இடப்பட்டு ஸ்ரான்லி மின்சக்தி நிலையம் எனவழங்கியது இந் நிலையம் இரண்டு மூன்று மெகவாட் உற்பத்தி செய்யக்கூடிய மின்சார உற்பத்தியந்திரங்களைக் கொண்டிருந்தது.

இதன்பின்னர் 3-வது மின்சக்தி உற்பத்தி யந்திர சாதனங்களும் இங்கு நிறுவப்பட்டன இந்த மின்சக்தி நிலையம் தற்போதுபயனற்றதென்று நீக்கப்பட்டு விட்டது.

1939-ம் ஆண்டு 3 மெகவாட் உற்பத்தி செய்யக்கூடியமற்றுமொரு மின்சார உற்பத்தி யந்திரம் புறக்கோட்டை மின்சார நிலையத்தில் நிறுவப்பட்டது. இவ்வியந்திரங்களை யக்குவதற்கு கரி பயன்படுத்தப்பட்டது. பின்னர் இது தவிர்க்கப்பட்டு டீசல் எண்ணெய் பயன்படுத்தப் பட்டது. இந்த மின் உற்பத்தி யந்திரங்களில் சில இன்னும் ஸ்திரமானவைகளாக இயங்குகின்றன. அப்பொழுது கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 7.9 மெகவாட்ஸ்களே ஆகக்கூடிய தேவையாகவிருந்தன.

அன்றிலிருந்து 1950-ம் ஆண்டுவரை உலகமகா யுத்தத்தின் காரணமாகவும் 1930-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார [...]

[...]லறவு காரண[...] நாட்டில் மின்சக்[...] விருத்தியில் வளர்[...] படவில்லை.

அது வளர சகிய[...] எண்ணெயுமே மி[...] உற்பத்தி[...]ான [...] கப் பய[...]டுத்தப்[...] இலங்கையில் கரி[...] ணெய் போன்றவை[...] ததால் அவற்[...] இலங்கை இறக்கும[...] வேண்டியேயிருக்கி[...]

ஆனால் இந்நாட்[...] நீர்வளமுள்ளது [...] யளித்த இக் கொ[...] கொண்டு [...] உற்பத்திக்குப் பய[...] லாம், எனவே இந்[...] ளூர் நீர்வளத்தைப[...] படுத்தி மின்சக்தி[...] பத்தி செய்தல் [...] ஆண்டளவில் [...] றைலண்ஸ் ஸ்தாப[...] திரு டி. ஜே. விம[...] திரா ஆகியோரா[...] ரப்பட்டது.

### நீர்மின்சக்தித் திட்டம்

1927-ம் ஆண்டு [...] சக்தித் திட்டத்தின்[...] வது நிலை வேலை[...] கப்பட்ட பொழுது[...] மகாயுத்தத்தினால்[...] தாக்கத்தினால் இ[...] நிறுத்தப்பட்ட[...] றிருந்தபொழுதும் [...] இவ்வேலை மேற்[...] பட்டு பலவித க[...] னூடே பூர்த்தி [...] பட்டு 1950-ம் ஆ[...] டோபர் மாதம் 3[...] ஆரம்பிக்கப்பட்ட[...] திட்டத்தின் [...] கமுவா ஓயாவுக்[...] யாற்றின் ஒரு[...] தோட்ட[...] பிரி[...] அணை கட்டப்பட்[...] மூலம் ஒரு நீர்த்[...] கட்டப்பட்டது. [...] கட்டப்பட்டு [...] வில் 25 மெகவா[...]

# ...ளின் அன்பு வெள்ளத்தில் ...காதேசாதிபதி!

## ...மெல்லாம் ... வரவேற்பு

...திருபர் யோகி -

...டப்பட்டிருந்தது. ...பல இடங்களில் ...பந்தல்கள் அமை...ந்தது. ...சாதிபதி விஜய ...ட்டி பலாலி ...லையம்முதல் கிங்ஸ் ...ர சந்திக்கு சந்தி ...பந்தல்கள் எல் ...ங்காரமாக ஜோ ...யப்பட்டிருந்தது. ...லாதவாறு விமான ... மக்கள் வெள் ...ருந்தது. ... எவ்வித...

பாடின்றி நாட்டின் தலைவரை வரவேற்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். பலாலி விமான நிலையம் எங்கும் ஒரே அலங்காரம். பாடசாலை மாணவர்கள் கைகளில் தேசியக் கொடிகளை தாங்கிய வண்ணம் அணியணியாக திரண்டிருந்தனர்.

இரு ரோயல் விமானப் படை விமானங்களில் அமைச்சர்கள் வந்து சேர்ந்தனர். அதன் பின்னர் வந்த விமானத்தில் மகா தேசாதிபதியும் பதில் பிரதமரும் வந்து இறங்கினர்கள். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, அமைச்சர் கே. பி. இரத்னாயக்கா மற்றும் வடபகுதி எம். பி க்கள், மயிலிட்டி கிராமசபை தலைவர் திரு கே. இராஜலிங்கம் ஆகியோர் மகா தேசாதிபதியையும், அமைச்சர்களையும் மாலைசூட்டி வரவேற்றனர்.

விமான நிலையத்தில் அனுமதிச்சீட்டு உள்ளவர்களை மட்டுமே பொலிசார் உள்ளே செல்ல அனுமதித்தனர். ஒரு கட்டத்தில் ஆர்வ மேலீட்டினால் முன்னால் செல்ல முயன்ற மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் பொலிசார் சிரமமெடுத்தனர்.

விமான நிலையத்திலிருந்து ராஜபவனியாக மகா தேசாதிபதியும் அமைச்சர்களும் கிங்ஸ் கவுஸ்க்கு சென்றனர் வழியில் வீதியின் இரு கரையிலும் பாடசாலை மாணவர்கள் தேசியக் கொடிகளை உயர்த்தி வரவேற்றனர். பெருந்திரளான மக்கள் சந்திக்குச் சந்தி திரண்டிருந்தனர். வரவேற்புப் பந்தல்களில் மகா தேசாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் போட்டி போட்டுக்கொண்டுமாலை சூட்டினார்கள்.

மாலை யாழ்நகர மண்டப வளவிற்குள் நிறுவப்பட்ட அடையாளச் சின்னத்தை திரைநீக்கம் செய்யும் வைபவத்தின்போது திரு ஏ. ஜி. ராஜசூரியரினால் ஏதாவது பிரச்னை ஏற்படுமா என்று பலர் பேசிக் கொண்டனர். அதற்கு காரணம் அந்த வைபவ நிகழ்ச்சியில் மாநகரசபை உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைக்கப்படும் நிகழ்ச்சியும் இடம்பெற்றிருந்தது. திரு இராஜசூரியர் மாலை 2 மணிக்கே அங்கு வந்துவிட்டார். நகரமண்டப வாசலில்உறுப்பினர்கள் அணிவகுத்து நின்றனர், திரு இராஜசூரியரும் ஐந்தாவது இடத்தில் நின்றுகொண்டிருந்தார்,

பொலிஸ் நிலைய சந்தியிலிருந்து மகாதேசாதிபதியும் அமைச்சர்களும் அழைத்து வரப்பட்டனர், மேயர் தலைப்பாகை அணிந்து உத்தியோக உடையில் வந்திருந்தார், குடைகொடி ஆலவட்டம் சகிதம் மேளவாத்திய இசையுடன் ஊர்வலம் நகர மண்டப வாசலை வந்தடைந்தது மேயர் உறுப்பினர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்துகொண்டு வந்தார், மற்றும் உறுப்பினர்கள் போல் திரு இராஜசூரியர் மகாதேசாதிபதிக்கு கைலாகு கொடுத்து வரவேற்றார், மேடையில் மகா தேசாதிபதியும் பதில் பிரதமரும், மேயரும் அமர்ந்திருந்தனர், பின்வரிசையில் தமிழரசு தமிழ்காங்கிரஸ் எம். பிக்கள் ஒன்றாக அமர்ந்திருந்தனர்,

அடையாள சின்னத்தை மகா தேசாதிபதி திரை நீக்கம் செய்தபின் எல்லோருக்கும் பால் சோறுவழங்கப்பட்டது. வைபவம் முடிந்த பின்னர் மகாதேசாதிபதி அங்குநின்ற மக்களுடன் சிரித்த முகத்துடன் அன்பாக அளவளாவினார். பொலிசார் இதற்கு குறுக்கே நிற்கவில்லை அமைச்சர்களும்மக்களுடன் அளவளாவினார்கள்

யாழ் திறந்தவெளி அரங்கு மாலை 6 மணிக்கே மக்கள் வெள்ளத்தால் நிரம்பி விட்டது அனுமதிசீட்டுஉள்ளவர்களுக்கு மட்டுமே மேடைக்கு அருகில் உள்ள ஆசனங்கள் வழங்கப்பட்டன பெரும்பாலான மக்கள் மணிக்கணக்காக நின்று கொண்டே நிகழ்ச்சிகளை கவனித்தனர். நேரம் செல்லச்செல்ல மக்கள் வெள்ளம், பொதுசன நூல் நிலையவளவு மணிக்கூண்டு பகுதி எல்லாம்நிரம்பி விட்டது.

மேடையில் வடபகுதி எம். பிக்களும் சகல மத தலைவர்களும் அமர்ந்திருந்தனர். இருபக்கத்திலும் பாண்ட் வாத்தியக் கோஷ்டியினர்இசைமீட்டிக் கொண்டிருந்தனர். மகாதேசாதிபதியும் அமைச்சர்களும் மேடைக்கு வந்து அமர்ந்ததும் எங்கும் அமைதி நிலவியது. முதலில் பதில் பிரதமர் திரு. மைத்திரிபாலசேனநாயகா சிங்களத்தில் உரைநிகழ்த்தினார். அவரின் உரையை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கே. பி. இரத்னாயக்கா தமிழில் மொழி பெயர்த்தார். எல்லோரும் மொழிபெயர்ப்பை உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்தனர். மகாதேசாதிபதியின்சிங்கள உரையை தபால்மந்திரி திரு. செ. குமாரசூரியர் தமிழில் மொழிபெயர்த்தார், அதன் பின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

யாழ்ப்பாண மக்களின் அன்புவெள்ளத்தில் மகா தேசாதிபதி அவர்கள் திக்குமுக்காடித் திணறிப்போயிருப்பார் என்பதை நிச்சயமாகச்சொல்லலாம்.

## இளைஞர்களுக்கு வி. பி: யோசனை

மாவிட்டபுரம், ஞாயிறு

''இன்று வாலிபர்கள் உத்தியோகம் பெறுவதில் மட்டும் கவனம் செலுத்தாது நாட்டை அபிவிருத்தி செய்யும் முக்கிய பணியில் ஈடுபடவேண்டும். இன்றைய மக்கள் அரசு இங்கு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் நோக்குடன் லக்சபானா மின்சாரம் இணைத்துள்ளதை பயன்படுத்தி வாலிபர்கள் நவீன முறையில் இயந்திரங்களை பாவித்து நாட்டை பொருளாதாரத்துறையில் முன்னேற்ற முன்வரவேண்டும்'' என கம்யூனிஸ்ட் வடபிரதேசச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் குரும்பசிட்டியில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

## ...சக்தி

...காரணமாகவும் ...மின்சக்தி அபி... வளர்ச்சியேற்...

...ர கரியும் டீசல் ...மே மின் சக்தி ...ான சக்தி... ...டுத்தப்ப... ...ல கரி, என் ...போன்றவையில்லா ...அவற்றையும் ...இறக்குமதிசெய்ய ...யிருக்கிறது.

...இந்நாட்டில் நல்ல ...ளது இறற்கை ...க் கொடையைக் ... அதை மின்சக்தி ...குப் பயன்படுத்த ...வே இந்த உள் ...ளத்தைப் பயன் ...மின்சக்தியை உற் ...செய்தல் 1916-ம் ...யில் எவ். பி ... ஸ்தாபனத்தார் ... ஜே. விமலசுரேந் ...யோரால் உண...

...சக்தித்...

... ஆண்டு நீர் மின் ...ட்டத்தின் முதலா ... வேலை ஆரம்பிக் ... பொழுதும் உலக ...த்தினால் ஏற்பட்ட ...னால் இவ் வேலை ...பட்டது. இவ்வா ...பொழுதும் பின்னர் ... மேற்கொள்ளப் ...லவித கஷ்டங்களி ... பூர்த்தியாக்கப் ...950-ம் ஆண்டு ஒக் ...மாதம் 30-ம் திகதி ...கப்பட்டது. இத் ...தினால் கெருகல் ...ஓயாவுக்கு [களனி ...ஒருகிளை] குறுக்கே ... பிரிட்ஜ்ஜில் ஒரு ...டப்பட்டது.இதன் ...ஒரு நீர்த்தேக்கமும் ...பட்டது. இவ்வாறு ...பட்டு லக்சபானா ... மெகவாட்ஸ் மின்

சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. இந்த வேளையில் கல்லோயா அபிவிருத்தி சபை கனடாவின் உதவியோடு 5 மெகவாட் சக்தி தரத்தக்க நீர் மின்சக்தி நிலையமொன்றை அமைத்தது.

1955-ம் ஆண்டிலிருந்து படிப்படியாக மின்சக்தியின் தேவை நாடெங்கும் . திகரித்தது. இவ்வாறு மின் சக்தி தேவை அதிகரிக்கவே நீர் மின்சக்தித் திட்டத்தின் 2-வது நிலையையும் உடனடியாகச் செயற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1958-ம் ஆண்டு இத் திட்டத்தின் 2-ம் நிலை ஆரம்பிக்கப்பட்டது.

(தொடரும்)

## 'மொழிப் பிரச்னைக்குத் தீர்வுவேண்டும்'

உடுப்பிட்டி, ஞாயிறு

'சுவிட்சர்லாந்து கனடா போன்ற தேசங்கள் பல மொழிகளைப் பேசும் மக்களைக்கொண்ட நாடுகள் அங்கு ஒவ்வொரு மொழியும் அரசாங்க மொழியாகக் கருதப்படுகின்றது. ஆனால் இலங்கை மொழிப் பிரச்னையைச் சுமுகமாகவும் திருப்தியாகவும் தீர்த்து வைக்கவில்லை, மொழிப் பிரச்னை இலங்கையில் ஒரு குழப்ப நிலையை உருவாக்கியுள்ளது இப்பிரச்னை திருப்திகரமான முறையில் தீர்த்து வைக்கப்படவேண்டிய தொன்று என்பதை இப்போதைய அரசியல் தலைவர்கள் ஒளிவுமறைவின்றி ஏற்றுக்கொண்டிருப்பது தமிழ் மக்களுக்கு மிக்க மகிழ்ச்சியையும் பூரிப்பையும் கொடுத்துள்ளது'

இவ்வாறு வழக்கறிஞரும் புலோலிதெற்கு முற்போக்கு முன்னணிப் போஷகருமான திரு. எம். செல்லத்தம்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் இயக்கத்துக்கு பண்டிதர் அழைக்கிறார்

''தமிழ் இயக்கம்'' என்ற தலைப்பில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியும் தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் விடுத்துள்ள ஓர் அறிக்கையின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது.

முன்னர் தமிழிலும் வெளியிடப்பட்ட நிருவாக அறிக்கைகள் சுற்றறிக்கைகள் முதலியவற்றில் இப்பொழுது தமிழ் புறக்கணிக்கப்படுகின்றது. அமைச்சர்கள் அனுப்பும் கடிதங்கள், அறிக்கைகள் பலவற்றில் தமிழ் இடம்பெறவில்லை. இவற்றிலே ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்படும் இடமும் கூடத் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை. இ போ. ச., கல்வி அமைச்சு, தொழில் திணைக்களம் முதலியவற்றில் இருந்து தனிச் சிங்களத்திலேயே தமிழ் மக்களுக்குக் கடிதங்கள் முதலியன அனுப்பப்படுகின்றன.

ஆங்கிலம் தெரிந்தவர்கள் தமிழில் கடிதங்கள் அனுப்பினால் அவர்களுக்கு மறுமொழி ஆங்கில மொழி பெயர்ப்புடன் சிங்களத்தில் அனுப்பப்படுமென்றும்தமிழ் மொழிச் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எனக்குப் பிரதிநிதிகள்சபையில் மறுமொழி தந்தார். இது சட்டத்திற்கு மாறானதென்றால் வழக்குத் தொடருமாறும் கூறினார். ஆனால் அவரே எனக்குச் சிங்களத்திலும் தமிழிலும் கடிதங்கள் அனுப்பி வருகின்றார்.

அரசாங்கத்திற்குத் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பை மட்டுமன்றித் தமிழிலேயே மறுமொழியைப் பெறும் சட்ட உரிமை இன்று தமிழ் மக்களுக்கு உண்டு. இந்தச் சட்டத்தை அழிக்குமாறு சிங்களத் தீவிரவாதிகள் இன்று குரல் எழுப்புகின்றனர் அரசியலமைப்பு மாற்றத்தால் - போதிய ஆட்சி உரிமையினால் மட்டுமே தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறலாம். சட்டத்தினால், நீதிமன்றத் தீர்ப்பினால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி உரிமையைப் பெற முடியாது.

### முந்திய அரசாங்கம் ஏமாற்றியது

ஐக்கியதேசியக்கட்சியின் தேசிய அரசாங்கம் தான் 1966ல் நிறைவேற்றிய தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களை நன்கு நடைமுறைப்படுத்தாமல் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது. ''சிங்களமும் தமிழும் இந்நாட்டின் உத்தியோக மொழிகள்'' எனும் சட்டம் 1944 தொடக்கம் 1956 வரை நாட்டில் நிலைபெற்றிருந்ததுஇது1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தால் அழிக்கப்பட்டது தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற அரசியல் உரிமைகளைப் பெற்றாலன்றிச் சட்டங்களின் உதவியைக் கொண்டோ ஆளுகின்றவர்களின் தயவினாலோ இந்நாட்டில் உரிமையுடன் வாழ முடியாது. இதனாலேயே இணைப்பாட்சிதான் தமிழ் மக்களுக்கு வேண்டுமென எங்கள் கட்சி போராடி வருகின்றது.

இப்பொழுது தமிழ்மொழிக்குச் சில துறைகளிலுள்ள உரிமைகளைச் சென்ற அரசாங்கத்தில் எங்கள் கட்சி பெற்று நிலைநாட்டிய சில உரிமைகளை இந்த அரசாங்கம் அழித்துக்கொண்டு வருகின்றது; சிங்களத்தை வலித்து திணிக்கின்றது; தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கனுப்புகின்றது. இவற்றை நான் பிரதம அமைச்சருக்குச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன், பிரதம அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருப்பதாக எனக்கு அறிவித்தார். கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் இதுபற்றிஎழுதினேன் அவர் சிங்களத்துடன் ஆங்கிலத்தைப்பயன் படுத்தித் தமிழைப் புறக்கணிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்

'அரசகரும அலுவல்களில் ஆங்கிலம் இனி இல்லை அதன் இடம் தமிழுக்கு குமாரசூரியர் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுவிட்டது' 12-8-70-ல் ஒரு பத்திரிகை செய்தியை வெளியிட்டது. தமிழரின் சார்பில் அமைச்சர் அவைக்கு நியமிக்கப்பட்ட கௌரவ செ குமாரசூரியரின் பெயருடன் வெளியான திட்டம் எங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ தெரியவில்லை! ஆனால் அமைச்சர் குமாரசூரியரே தமிழைப் புறக்கணிக்கிறார். எனது தமிழ்க் கடிதத்திற்கு சிங்களத்தில் மறுமொழியும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பியிருக்கின்றார். இப்படி ஏன் அவர் தமிழைப் புறக்கணிக்கிறார் என்று நான் பிரதிநிதிகள் சபையில் கேட்ட கேள்விக்கு 'தபால் கிளைகளைத் புனரமைப்புச் செய்யும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் தமிழில் மறுமொழி அனுப்ப முடியாத நிலை தபால் அமைச்சுக்கு இருந்து வருகின்றது' என்று மறுமொழி கூறப்பட்டது

துணைக் கல்வி அமைச்சர் கௌரவ துடாவை யாழ்ப்பாணம் வந்து சிங்களத்தையும் தமிழையும் நடைமுறையில் நாள்தோறும் பயன்படுத்துவோம் என்று கூறினார். இவர் 6-1-71-ல் பிரதிநிதிகள் சபையில் எனது கேள்விக்குச் சமர்ப்பித்த மறுமொழி சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே உளது. தமிழில் இல்லை, ஏன் தமிழிலும் மறுமொழி தரவில்லை? யென்று இப்பொழுது எங்கள் கட்சி சபாநாயகரைக் கேட்டுள்ளது

சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் போக்குவரத்து அமைச்சருமான கௌரவ லெஸ்லி குணவர்த்தன அவர்கள் 'இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் சிறுபான்மையராகஇருந்தாலும் அவர்களைத் தென்னிந்தியாவில் வாழும் தமிழர்களோடு சேர்த்து நோக்குமையில் தமிழ் மக்களே பெரும்பான்மையினராகின்றனர். இலங்கையின் வரலாற்றைப் பற்றி ஒருவர் சிந்திப்பாராயின் இந்த இருபகுதியினருக்கும் இடையில் நடைபெற்ற போராட்டங்களை அதில் நிறைந்துள்ளதைக் காணலாம் எனவும்,

மற்ற நாடுகளிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தவர்களுக்கு என்னென்ன விசேட சலுகைகள் தேசிய ஒற்றுமையை உருவாக்க வழங்கப்படுகின்றனவோ, அது போன்று இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டச் சிங்களமக்களுக்கு வழங்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார். தமிழர் பெரும்பான்மையினராகின்றபடியால் அவர்களுக்கும் அவர்களுடைய மொழிக்கும் பாதுகாப்போ விசேட சலுகைகளோ தேவையில்லை என்பதுஅவருடைய சமசமாஜக் கட்சியின் புதிய கொள்கையாகும்.

---

சிங்கப்பூர், ஜன. 16

சிங்கப்பூரில் 'லங்காராணி' கப்பல் இலங்கைக்குச் சொந்தமாக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் நேற்றிரவு கைச்சாத்திடப்பட்டது.

நாளை அதிகாலை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இலங்கைக்கு உடைமையாக்கப்பட்ட கப்பலுக்கு 'லங்கா ராணி' என்னும் பெயரைச் சூட்டுவார்.

# 'இன,மத, மொழியால் ஏன் பிரிந்திருக்க வேண்டும்? ஒன்றுபட்டு உழைப்போம்'

## என அழைக்கிறார் ரத்னாயக்கா

மாவிட்டபுரம், ஞாயிறு

சிறியநாடாக விளங்கும் இந்நாட்டில் இன, மத, மொழிஎன்பவற்றால் மக்கள் ஏன் பிரிந்திருக்கவேண்டும். இந்நாட்டில் பல சாதி மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பான்மையாக சிங்களவரும் சிறுபான்மையாக தமிழரும், முஸ்லீம்களும் வாழ்கிறார்கள், இந்த மூன்று பகுதியினரும் ஒன்றுபட்டுவிட்டால் நாடு முன்னேறிவிடும் ஆயிரக்கணக்கான வருடங்கள் ஒற்றுமையாக வாழ்ந்த நாம் ஏன் இன்று பிரிந்து வாழவேண்டும் என்று சிந்தித்து சகல மக்களும் செயற்படவேண்டிய தவசியம்.

இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைக்காரியாலயத்தை திறந்துவைத்துப் பேசுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு. கே. பி. இரத்தினாயக்கா கூறினார்.

தெல்லிப்பழை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளைத்தலைவர் திரு. ரி. பி. முருகையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்!

எமது அரசு பற்றிய தவறான கருத்துக்களை சிலர் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பிவருகின்றனர். நாம்ஒருபோதும் தமிழ் மக்களுக்கு விரோதமாக நடந்ததும் இல்லை. நடக்கப்போவதுமில்லை. சிங்கள-தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர் குலைக்கும் செயலை ஒரு சில அரசியல்வாதிகள் தமது தொழிலாகக் கொண்டுள்ளனர் இந்த மாதிரியான அரசியல் வாதிகள் எம்மத்தியில் இருக்கும் வரை இரு இனங்களும் ஒற்றுமையடையவும்மாட்டாது ஆகவே இந்த அரசியல் வாதிகளை அரசியலில் அப்புறப்படுத்த உங்கள் ஆதரவுடன் நான் தயாராகஇருக்கிறேன்.

தமிழை சிங்களவர் அழித்து விடுவார்கள் என்று கூறுகிறார்கள் எந்தமொழியையும் அழிக்கமுடியாது யார் ஒரு மொழியை அழிக்க முயன்றாலும் அம்மொழி வழருமேயொழிய அழியாது தமிழ்மக்கள் இந்நாட்டில் ஐக்கியத்தைஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமே தவிர சிறு சிறு சலுகைகளுக்காக ஒன்றுசேரக் கூடாது என்றார்.

திரு. வி, பொன்னம்பலம் முன்னாள் செனட்டர் பி. நாகலிங்கம் திரு. ரி பி.முருகையா ஆகியோரும் பேசினர்.

# கள்ளுத்தவறணை நடத்திய ஆசாமி பொலிஸில்!

மன்னார், ஞாயிறு

சிலகாலமாகக் கள்ளுத் தவறணை வைத்து நடாத்தியதாகக் கூறப்படும் ஆசாமி ஒருவர் பொலிசாரின் திடீர் முற்றுகையின்போது அகப்பட்டுக்கொண்டார். செல்வன் இராஜதுரை என்ற நபரைக் கைதுசெய்த பொலிஸ் கோஷ்டியினர் கள்ளத்தனமாக விற்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த எட்டு கலன் கள்ளையும் கைப்பற்றினராம்.

சிலாபத்துறை என்ற கிராமத்தில் நடந்த பொலிஸ் வேட்டையின்போதே இந்தச் சட்டவிரோதக் கள்ளுத் தவறணையும்முற்றுகைஇடப்பட்டதாம். களால் குற்றச் சம்பவங்கள் பெருமளவில் இக்கிராமத்தில் நடைபெறுவதாகத் தகவல் பெற்றுக் கொண்ட பொலிசார். இங்கு இன்னும் சில நபர்களையும் கைதுசெய்தனர். வடிசாராயம் தயாரித்தது. வடிசாராயம் விற்பனைக்கு வைத்திருந்ததுபோன்ற குற்றச் சாட்டுகள்மீது இவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவிருக்கின்றனர்.

# ஆசிரியர்கள் குறுக்குவழியில் இடமாற்றம் பெறவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

"வெளிமாகாணங்களில் பல ஆண்டுகள் கடமையாற்றி அண்மைக்காலத்தில் வடபகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் அனைவரும் குறுக்கு வழியில் இடமாற்றம்பெற்றுச்சென்றுள்ளதாகக் குற்றம் சாட்டுதல் எவ்விதத்திற் பொருத்தமானதுஎன்று எமக்குப் புலனாகவில்லை. இத்தவகையில் ஆசிரியர்கள் மீதும் அரசின் மீதும் மத்திய இடமாற்றச்சபையில் உள்ள தமிழாசிரியர் பிரதிநிதி பழி சுமத்துவது மிகவும் அபத்தமானது, அநீதியானது என்பதனை எமது சங்கம் வலியுறுத்த விரும்புகின்றது"

அகில இலங்கைச் சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலைகள் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எஸ். செல்லையா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"வடக்கே சென்றவர்கள் அனைவரும் குறுக்குவழியிற்றான் சென்றார்கள் என்று கூறுவதை விடுத்து எவரெவர் என்னென்ன குறுக்கு வழிகளைக் கையாண்டு வடக்கே இடமாற்றம் பெற்றார்கள் என்பதனை இந்த இடமாற்றச் சபைப் பிரதிநிதி பகிரங்கமாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு பகிரங்கப்படுத்த முன்வருவாரா? தொழிற்சங்க நடைமுறைகளைப் புரிந்துகொள்ளாது கண்டபடி அறிக்கை விடுவது பொறுப்புள்ள இடத்திலுள்ள இவருக்குப் பொருந்தாது. தமது தவறுகளை மறைக்க அப்பாவி ஆசிரியர்கள் எல்லார்மீதும் இவர் அபாண்டஞ் சுமத்தலாமா?

ஆசிரியர்களுக்கு மத்திய இடமாற்றச்சபை ஒன்று இருக்கவேண்டுமென்பதே எமது நீண்டகாலக் கோரிக்கை. தொழிற்சங்க ரீதியான நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் மத்திய இடமாற்றச் சபையைக் கலைக்கவேண்டும் என்று ஒருபோதுமே கோரமாட்டோம். ஆனால் வடபகுதி ஆசிரியர்கள் மீது வலிந்து இத்தகைய குற்றச் சாட்டினை சுமத்த முனைவது பரிதாபகரமானது!

# பொலிஸ் தொண்டர்படை

தாவடி, ஞாயிறு

"எமது கிராமத்து இளைஞர்கள் பொலிஸ் தொண்டர் படையில் சேர்ந்து, எமது கிராமங்களில் நடைபெறுகின்ற குற்றங்களைத் தடுப்பதற்குப் பொலிசாருக்கு உதவி புரிதல் சிறப்பானதாகும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடவும் உதவியாகும்."

மேற்கண்டவாறு உடுவில் கிராமசபைப் பகுதி சனசமூக நிலைய சமாசத்தின் பொதுக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரைநிகழ்த்திய உடுவில் கிராமசபைத் தலைவர் திரு, ச. முத்துலிங்கம் கூறினார்.

புதுவருட உத்தியோகத்தர்களும் இக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

# முருங்கனில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படும்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முருங்கன் கிராம சேவையாளர் பகுதியில் ஒரு பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் நடந்துவருகின்றன. முருங்கன் கிராமத்தில் 1967-ம் ஆண்டு ஆவணி நடந்த குரூஸ் வர்த்தகரின் படுகொலைக்குப் பின்பு இப்பகுதியில் பொலிஸ்நிலையம் மிக அவசியமென்று பொலிஸ் இலாகா அவதானித்துள்ளது. இங்கு பொலிஸ் நிலையம் அமைத்தால் அடிக்கடி முருங்கன்பகுதியில் அதிகரித்துவரும் திருட்டு, சண்டை முதலியவற்றை ஒழித்து விடலாமெனப் பொலிசார் கருதுகின்றனர்.

வலி-மேற்கு

# கூட்டுறவுச்சமாஜமும் புனரமைப்பும்

சங்கானை, ஞாயிறு

வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தற்போதைய கூட்டுறவுபுனருத்தாரணத்தின் காரணமாக வலி-மேற்கு கூட்டுறவு சங்க சமாசத்தை மூன்றுதாய்ச் சங்க பிரிவின்கீழ் அமைக்கப்படவேண்டுமென சம்பந்தப்பட்ட பிரிவில் உள்ள ப, நோ. கூ. சங்கங்கள் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

மானிப்பாய், சங்கானை. வட்டுக்கோட்டை என்ற அடிப்படையில் இப்புதிய அமைப்புகள் இருக்கவேண்டுமென சம்பந்தப்பட்ட சங்கங்கள் கூட்டுறவுப்பகுதிக்கு கருத்துத்தெரிவித்துள்ளதாகவும் நேரடிப்பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள இருப்பதாகவும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

---

# ஆசிரியர்களை அனுப்புவதாக மந்திரி உறுதி

மன்னார், ஞாயிறு

பல மாதங்களாகப் போதிய ஆசிரியர்களின்றி மிகவும் பாதிக்கப்பட்டநிலையில் இயங்கிவந்த பெரியமடு மகாவித்தியாலத்துக்கு மீண்டும் நல்ல காலம் ஏற்பட்டுள்ளது. பெற்றோர்களும் கிராமமுன்னேற்றச் சங்கமும் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியையடுத்து இப் பாடசாலைக்கு வேண்டிய ஆசிரியர்களை உடன் அனுப்பித்தருவதற்கு கல்வி மந்திரி இணங்கியுள்ளார் என்று அறியப்படுகின்றது.

இக் குறையை நீக்க பெற்றோர்களும் கி. மு. சங்கமும் பல முயற்சிகளை மேற்கொண்டனர். பின்பு அண்மையில் கி மு சங்க உறுப்பினர் குழு ஒன்று கல்விமந்திரியைக் கொழும்பில் சந்தித்து விஷயத்தை விளக்கிக் கூறி, பிள்ளைகளின் கல் பாதிக்கப்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டினராம். இதைத் தொடர்ந்து இப் பாடசாலைக்கு வேண்டிய ஆசிரியர்களை உடன் அனுப்பித் தருவதாக அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார்.

# ஓய்வு பெறும் ஆசிரியர்



பண்டிதர் தம்பையா

1945-ம் ஆண்டிலே மீசாலை விக்கினேசுவர வித்தியாலயத்தில் தலைமையாசிரியராகக் கடமையேற்று 25 ஆண்டுகளுக்கு மேல் அவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும் மாணவரின் உயர்ச்சிக்கும் அரும்பணி புரிந்தவர் பண்டிதர் கா. தம்பையா. ஆசிரியப் பணியில் நின்று நமது சமூகத்துக்கு அவர் செய்த அரும்பணிகளை உள்ளத்தே கொண்ட பழைய மாணவர்களும் பெற்றோரும் நன்றி மறவா உரிமையோடு காட்டும் அன்பின் பிரதிபலிப்பாக இன்று அவரது சேவையைப் பாராட்டி விழா வெடுக்கின்றார்கள்

பணிவுடைமையை அணியாகக்கொண்ட பண்டிதர் சிறுப்பிட்டியிலே பிறந்தவர். அங்குள்ள சைவ வித்தியாசாலையில் படித்து, திருநெல்வேலியிலே உயர் கல்வி பெற்றவர்.

முதலில் தாம் கற்ற பாடசாலையிலும் பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் அதன்பின் இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலையிலும்பணியாற்றினார். ஆன்றமைந்தடங்கிய பணியாளர்.

பண்டிதர் கல்வித்துறை பலவற்றிலும் தேர்ச்சி மிக்கவர். பிரச்சினை தரும் கணக்குகளை இலகுவான முறையில் விளக்குவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர். இலக்கிய இலக்கணப் பாடங்கள் கற்பிக்கத் தொடங்கினால் கடல்மடை திறந்தது போலத்தானிருக்கும், பாலர் வகுப்பு முதல் சி, பா. த. ப. வகுப்பு வரை 'மாணவர் கணித' நூல்களை இவர் எழுதியுள்ளார். சி பா த ப வகுப்பு வரை புவியியல் வரை படங்களுடன் கூடிய 'செய்கை முறைப் பூமி சாஸ்திரம்' என்னும் பயிற்சிப் புத்தகங்கள் இவரது வெளியீடுகள் புஷ்பயாத்திரைச் சுருக்க உரை, பாரதி தமிழ் வாசகம் முதலிய நூல்களை எழுதியும், பல தமிழ்ப் பாட நூல்களை மீள் பார்வைசெய்தும் உதவியுள்ளார்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்திலும் வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்திலும் பொறுப்பான நிருவாகங்களை மேற்கொண்டு திறம்படச்செய்து மதிப்புப் பெற்றவர். சாவகச்சேரி வட்டாரத்தில் நடைபெறும் கல்விப் பணிகளில் நிருவாகப் பொறுப்புகளை ஏற்று ஒழுங்கான முறையில் எல்லாரும் விரும்பும் வகையில் பல வருடங்களாகச் செய்துவருபவர்.

நாற்பது வருடங்களாக ஆசிரியர்- தலைமையாசிரியர் பதவியிலிருந்து இளைப்பாறும் பண்டிதர் ஆசிரிய உலகிற்கும் கல்வி கற்று முன்னேற விரும்பும் அத்தனை பேருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் துலங்குபவர். பண்டிதர் என்ற பெயரால் எல்லா இடங்களிலும் அறியப்பெற்றாலும் அன்னாரது சிரிய சேவை முழுவதும் எமது கிராம மக்களுக்கே கிடைக்கப்பெற்றது நாம் செய்த தவப்பேறாகும்.

பண்டிதர் தம்பையா பற்றிப் பண்டிதமணி பின்வருமாறு எழுதுகிறார்.

ஒருகாலத்தில் திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலை ஒரு சர்வகலாசாலை போன்று மிளிர்ந்தது. அங்கே தமிழ் சமஸ்கிருதம் சிங்களம் மூன்றையும் விருத்திசெய்யும் முகமாக மும்மொழிக் காவிய பாடசாலையொன்று நடந்தது. பிரவேச பாலபண்டித. வகுப்புக்கள் நடத்தப்பட்டன. நன்னூல் விருத்தி, சேனாவரையம் போன்ற கடின இலக்கண பாடங்கள் பதிற்றுப்பத்து முதலிய இலக்கிய பாடங்கள் நடைபெறும். வெளியிலிருந்து ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் வந்து கற்றார்கள்.

பெருமதிப்புக்குரியவரான கல்வயல் இராமுப்பிள்ளை உபாத்தியாயரும் அங்கே நடக்கும் வகுப்புகளிற் பங்குபற்றுவார். இராமுப்பிள்ளை உபாத்தியாயர் தெண்டித்துப் பண்டிதர் தம்பையாவுக்குப் பக்கத்தில் இருந்துகொள்ளுவார்.

கடினமான பகுதிகளுக்கு விளக்கம் நடக்கும்போது பண்டிதர் தம்பையா அநாயாசமாகவே புத்தகஓரத்தில் நாலாறு வார்த்தைகளில் சுருக்கக் குறிப்பெழுதிக்கொள்ளுவார். அதை இராமுப்பிள்ளை உபாத்தியாயர் வெகு ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டிருப்பார். எழுத்தெழுத்தாக வாசித்து மனதிற்பதித்துக்கொள்ளுவார். இதனை நான் கவனிப்பதுண்டு.

ஒரு நாள் இராமுப்பிள்ளை உபாத்தியாயர் என்னைச் சந்தித்து பண்டிதர் தம்பையா இயற்கையாகவே சிந்தனையை ஒருமுகப்படுத்தி இருப்பதையும், விரிந்த விளக்கங்களைச் சில வார்த்தைகளில் அழகான எழுத்தில் பக்கந்தோறும் ஓரத்தில் எழுதிக்கொள்ளும் திறமையையும் வியந்து வியந்து பாராட்டிச் சொன்னார். அப்பொழுது என் நிலைமை எப்படியிருக்கும்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்ற திருக்குறளை ஞாபகஞ் செய்து நோக்கவேண்டியதே என்னிடம் படித்து மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சையில் சித்தி யெய்தியவர்கள் சிலருண்டு. அவர்களில் என்னை அணுகி நெருங்கிப் பழகாத ஒருவர் இருந்தால் அவர் பண்டிதர் திரு. தம்பையாவேயாகும் ஆனால் எனது இருதய பீடத்தில் பண்டிதர் தம்பையாவுக்கே முதலிடம் இருந்து வந்தது. அவருடைய ஒழுக்க சீலமும் அடக்கமும் வார்த்தைகளை அளந்து பேசும் இயல்புமே என்னை வசீகரித்தவைகள்.

அன்பினாலும் பண்பினாலும் மக்களை ஈர்த்து வழிநடத்தும் தன்மையும், அஹிம்சை வாழ்வும் மேற்கொண்டு ஒழுகும் பண்டிதர் கல்விச் சேவையினின்றும் இளைப்பாறுதல் கல்வித்துறையிலும் இளஞ் சந்ததியினரிடமும் சமுதாய நலனிலும் அக்கறை கொண்ட யாவருக்கும் கவலையளிப்பதாகும். (கு வி ம)

# ‘மனைவியுடன் வரும் போது எதிரி கத்தியால் வெட்டினார்’

ஊரதிவு, ஞாயிறு

‘கடந்த சித்திரை வருடப் பிறப்பன்று நானும் எனது மனைவியும் எனது தகப்பனார் வீட்டிற்கு சென்று வீதியால் திரும்பிக் கொண்டிருந்தோம். முதலாவது எதிரியின் வீட்டுக்கு முன்னால் வந்தபோது இரண்டாவது எதிரி ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்தார். அவர் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க முதலாவது எதிரி கத்தியால் என்னை வெட்டினார். பின்னர் இருவருமாகச் சேர்ந்து என்னை முதலாவது எதிரியின் வீட்டு முற்றத்துக்குள் இழுத்துச் சென்று என்னை முருங்கை மரத்தோடு கட்டினர். அந்நேரத்தில் அங்கு நின்ற முதலாம் எதிரியின மனைவியான மூன்றும் எதிரி என்னைக் கையாலும், காலாலும், தடியாலும் தாக்கினார். மூன்று நான்கு மணித்தியாலங்களாக எனது கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் நிலத்திற்கிடந்தேன்’.

இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சாட்சியமளித்த நயினாதீவைச் சேர்ந்த மாரிமுத்து கணபதி என்பவர் கூறினார்.

இவ் வழக்கில் 1970ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி, நயினாதீவைச்சேர்ந்த மாரிமுத்து கணபதி என்பவரைத் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக, அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி பின்ளையான், நாகப்பன் சின்னத்தம்பி, நாகம்மா பிள்ளையான் ஆகியோர்மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தாக்கப்பட்டவரின் மனைவியான சின்னப்பிள்ளை கணபதி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

எனது கணவரை தங்களது வீட்டு முற்றத்துக்குள் இழுத்துச் சென்ற எதிரிகள் முதலாம் எதிரி, தனது வீட்டுக்குள் என்னைப் போகவிடாது தடுத்தார். நான் உடனே குளறிக்கொண்டு கிராமசேவகரிடம் ஓடிப்போய்ச் சொல்லி அவரைக் கூட்டிவந்தேன். நான் கிராமசேவகரிடம் சென்றபோது அங்கே எதிரி பக்கத்தவரும் நிற்பதைக் கண்டேன். எனக்கும் 8ம் எதிரிக்குமிடையில் முன்பே பகையிருந்தது.

விசாரணைமுடிவில் சாட்சியமுரண்பாடு காரணமாக எதிரிகளை நீதிபதி விடுதலை செய்தார் எதிரிகள்சார்பில் வழக்கறிஞர் ப. கதிரவேலு ஆஜராகி வாதாடினார்.

# “மீட்புப்படகு வேண்டும்”

மாவிட்டபுரம், ஞாயிறு

“மீன்பிடிக்குசென்று திரும்பாத மீனவர்களை விரைவில் தேடிப்பிடிக்க விரைவாக ஓடக்கூடிய படகு ஒன்றை சேவையில் ஈடுபடுத்துக” என்று மீன்பிடி அமைச்சர் மீன்பிடிக் கூட்டுத்தாபன தலைவர், வலி-வடக்கு காரியாதிகாரி ஆகியோருக்கு மயிலிட்டி கிராமமுன்னேற்றச்சங்கம் அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளது.

# பொங்கல் விழா

அம்பன், ஞாயிறு

கொக்குவில் மேற்கு கிராமமுன்னேற்றச்சங்கமும் சனசமூகநிலையமும் இணைந்து நடாத்திய பொங்கல் விழாவுக்கு திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை தலைமை வகித்தார்.

மேற்படி விழாவில் நல்லூர், கோப்பாய் எம். பி. க்கள் திரு. சி. அருளம்பலம், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும் முன்னாள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட திருவாளர்கள் ஆலாலசுந்தரம், புதுமைலோலன், அருணாசலம், பண்டிதர் இராசையா, கொக்குவில் கிராமசபை முதல்வர் திரு. இ. க. சபாபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அமரத்துவம், அவள் எங்கே என்னும் இரு நகைச்சுவை நாடகங்களும் இடம் பெற்றன.

# செய்தித் திரட்டு

## ஒரு கோஷ்டிக்கு ஒரு படகு

கோட்டை, ஞாயிறு

கூட்டுறவு சமாஜங்கள் மூலம், நாலு மீனவர்களைக் கொண்ட ஒரு கோஷ்டிக்கு ஒரு படகுவீதம் வருடத்திற்கு 500படகுகள் வழங்கப்படவுள்ளன.

கடன் அடிப்படையில் வழங்கப்படும் இப் படகுகளுக்குரிய கிரயத்தை மீனவர்கள் ஐந்து வருட தவணை காலத்தில் செலுத்தி முடிக்கலாம். தனிப்பட்ட முறையில் படகுகளோ, வள்ளங்களோ வழங்கப்படமாட்டா.

## இலங்கை இரத்தினக்கல்லுக்கு கிராக்கி

கோட்டை, ஞாயிறு

அண்மையில் இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்ட இரத்தினக்கல்லை வாங்குவதற்கு பல ஐரோப்பிய நாட்டுக் கம்பனிகள் முன் வந்துள்ளன.

இதன் போட்டோவையும் கல்லின் விபரங்களையும், திருமதி. ஜாக்குலினுக்கும், ஏனைய வெளிநாட்டு நடிகைகளுக்கும் அனுப்பி இதை உயர்ந்த விலைக்கு விற்பதற்கான நடவடிக்கைகளை நிதியமைச்சு மேற்கொண்டுள்ளது. இக்கல் தற்போது மிகப்பாதுகாப்பாக கொழும்பு-மக்கள்வங்கி தலைமைக் காரியாலயத்தில் வைக்கப் பட்டுள்ளது.

## கமிஷன் விசாரணை செய்யும்

கோட்டை, ஞாயிறு

உயர்தர அரசாங்க ஊழியர்களின் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள்பற்றி லஞ்சக் கமிஷன் விசாரணை செய்யவிருக்கிறது.

இது சம்பந்தமாக, லஞ்ச இலாகாவின் இரகசிய விசாரணை அதிகாரிகள் சர்வதேச பொலிஸாருடன் கூட்டாகச் சேர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மகாநாடு

கோட்டை, ஞாயிறு

ஹைதராபாத்தில் நடைபெறவிருக்கும் முதலாவது ஆசிய போஷாக்கு காங்கிரஸ் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளாக டாக்டர் சி. மகேந்திராவும், டாக்டர் திருமதி. பி. வி. மென்டிஸும் கலந்து கொள்வார்கள்.

இந்திய அரசாங்கம் உட்பட பல சர்வதேச இந்திய நிறுவனங்கள் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளும். இம்மாதம் 28ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் இம் மகாநாடு பெப்ரவரி 2ந் திகதி வரை நடைபெறும்.

## பரிசளிப்பு விழா

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவை முருகன் மார்கழி மாத பஜனைச் சபையின் 22வது ஆண்டுப் பரிசளிப்பு விழாவும். திருமுருகாற்றுப்படை வெளியீட்டு விழாவும் நாளை ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

வைத்திய கலாநிதி மி இராசேந்திரம் தலைமையில் நிகழும் இவ்விழாவில் முன்னாள் வவனியா எம் பி திரு சிசுந்தரலிங்கம், சைவ அனுட்டான சபைத்தலைவர் திரு க சிவலிங்கம், பிரமஸ்ரீ து சண்முகநாதகுருக்கள் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

திருமுருகாற்றுப்படை நூலை ஆசிரியர் திரு ஏ மி பொன்னுத்துரை வெளியிட்டுவைப்பார்.


**சண்முகநாதனுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் நாட்டம் ஆகவே அவரை வெகு துரிதமாக லண்டனுக்கு அனுப்பி வைத்தோம், பீ. ஓ. ஏ. ஸி. வி. ஸி. 10 விமானத்தில்...**


எமது வி. ஸி. 10 லண்டன் வர்த்தகத்துக்குத் துரித மார்க்கம் மட்டுமல்ல, சிறந்ததும் அதுவே. சண்முகநாதனைக் கேளுங்கள் சொல்வார்.

ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கக் கிடைத்த சாய்வு நாற்காலி; அன்பும் பண்பும் நிறைந்த பிரிட்டிஷ், மற்றும் ஆசியப் பெண்களின் உபசரிப்பு; தமது பிரீவ்கேஸ் காலடியில் இடறுமல் பத்திரமாக இருக்க தலைக்கு மேலே நிலைப் பெட்டி—இவை பற்றியெல்லாம் அவர் சொல்லுவார்.

ஆனால் விமானத்தின் பின்புறத்தில் இருந்த ரோல்ஸ் ரோய்ஸ் எஞ்சின்கள் பற்றி அவர் எதுவும் சொல்லமாட்டார்— அவற்றின் சத்தத்தை அவர் கேட்கவே இல்லை.

வெள்ளைக்கார மற்றும் ஆசிய விமான ஊழியரின் உபசாரம், மேல்நாட்டு கீழ்நாட்டு உணவு வகையறுக்கள் இவை எல்லாம் சண்முகநாதன் வாழ்நாளில் காணாத அனுபவம். அதில் திளைத்து மிகுந்த உற்சாகத்துடன் ஹீத்ரோ விமானத் தளத்தில் இறங்கினார்; வியாபார முயற்சிக்குத் தயாராக.

சண்முகநாதனுக்கு மட்டும்தானா இந்தவாய்ப்பு, நீங்களும் அனுபவித்தால் என்ன?



BOAC

ER 7

பீ. ஓ. ஏ. ஸீ. உங்களைக் கரிசனையுடன் உபசரிக்கிறது.

உங்கள்பிரயாண ஏஜெண்டுடன்கலந்தாலோசியுங்கள், அல்லது பீ. ஓ. ஏ. ஸி. க்கு போன் செய்யுங்கள் — 27731/5

பிரிட்டிஷ் ஓவர்சீஸ் எயர்வேய்ஸ் கோர்ப்பரேஷன் - எயர் சிலோன்_ குவான்டாஸ் ஆகியவற்றுடன் இணைந்தது.

# வருட முடிவுக்குள் வடக்கில் உபவானெலி நிலையம்?

## ஜே. ஆர். அடிக்கல் நாட்டிய இடத்தையும் அமைச்சர் பார்த்தார்

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதியில் உபவானெலி நிறுவுவதற்கான இடங்களை, நேற்று தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. ஆர். எஸ். பெரேரா நேரில் பார்வையிட்டார். இவருடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன தலைவர் திரு. சுனில்முனசிங்கா மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களும் சென்றிருந்தனர்.

அமைச்சர் யாழ்ப்பாணம் வரும்வழியில் கிளிநொச்சி தொகுதியில் உள்ள உமையாள் புரத்திற்கு நேரில் சென்று இடத்தை பார்வையிட்டார். இந்த இடத்தில் தேசிய அரசாங்ககாலத்தின் போது, முன்னுள் அமைச்சர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனுவினுல், உபவானெலி நிலையத்திற்கு அத்திபாரக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினமிரவு மின் இணைப்பு வைபவத்தில் கலந்து கொண்டபின்னர், அமைச்சர் திரு ஆர். எஸ் பெரேரா, பொறியியலாளர்களுடன் ஊர்காவற்றுறை தொகுதியிலுள்ள மண்டதீவுக்கு சென்று அங்கும் உபவானெலி நிலையம் அமைக்க வசதியான இடம் இருக்கின்றதா என்பதை நேரில் பார்வையிட்டார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வானெலிவிசாரணை கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த பலர், வடபகுதியில் உபவானெலி நிலையம் நிறுவுவதன் அவசியத்தை வற்புறுத்தி கூறியிருந்தனர். வடபகுதி கலைஞர்கள கொழும்புக்குச் சென்று வானெலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதால் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இவ்வருட இறுதிக்குள் வடபகுதியில் உபவானெலி நிலையம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படு மென்றும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் ஒலிபரப்பு கூட்டுதாபனத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மின்சக்தி இணைப்பு நல்லெண்ண தொடர்பு
## யாழ். நகரில் மகாதேசாதிபதி

(கா. யோகநாதன், கு. வி. மகாலிங்கம்) யாழ்ப்பாணம், ஞாயிறு

**"இந்த நல்ல முயற்சியை ஒரு புதிய மின்னியக்கத் தொடர்பு என நீங்கள் அழைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்த முயற்சி, பரஸ்பரம் நாம் காட்டிக்கொள்ளும் ஒரு நல்லெண்ணத் தொடர்பு என்பேன். இப்படியான தொடர்புகள் தான் நமது சமூகங்களை இன்னும் இறுக்கமாக்கிச் சமூகத்தின் நல்ல அபிவிருத்திக்கு ஊக்கம் அளிக்கும்"**

யாழ்ப்பாணத் திறந்த வெளியரங்கில் நேற்றிரவு மின்விசையை அமுக்கி யாழ் குடாநாட்டுக்கு மின்சக்தி விநியோகம் செய்துவைத்துப் பேசிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா மேற்கண்டவாறு கூறினார்.

மகாதேசாதிபதியுடன் பதில் பிரதமர் திரு. மைத்திரிபால சேனநாயகா, திருமதி சேனநாயகா, அமைச்சர்கள் திரு செ. குமாரசூரியர், திரு ஆர் எஸ் பெரேரா திரு எஸ் எஸ் குலதிலகா, திரு கே பி இரத்நாயகா, திரு ஜோர்ஜ் ராஜபக்ஷ, திரு சிறிவர்த்தனு ஆகியோர் திறந்தவெளி அரங்கு மேடையில் வந்தமர்ந்தனர் மேடையில் சகல மதத் தலைவர்களும், வடபகுதி தமிழரசு எம் பிக்களும், தமிழ்க் காங்கிரஸ் எம் பிக்களும், நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம், மேற்சபை உறுப்பினர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், மேயர் திரு ரி எஸ் துரைராசா மற்றும் முக்கிய பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

மகாதேசாதிபதி மின் விசையை அமுக்கியதும், யாழ். நகரம் முழுதும் ஒளிமயமாகியது.

மகாதேசாதிபதி தமது உரையில் மேலும் கூறியதாவது:

மஸ்கெலிய ஒயாத் திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் உயர்ரக வோல்ட்களின் நீடிப்பை வடமாகாணம் வரையில் அமைந்ததனுலேயே இது சாத்தியமாயிற்று. அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடபகுதியில் இருந்துவந்த ஒரு பெரும் குறையை கிரிட் திட்ட முறைப்படியாக அமைந்த மின்விநியோகம் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். யாழ் குடாநாட்டுக் கைத்தொழில் வளர்ச்சி பல்கிப் பெருக நாம் அமைக்கும் இந்தப் புதிய மின்சக்தி உயிர்த் துணையாக நிற்பதோடு, விவசாயப் பொருளாதார வளம் யாழ் மாவட்டம் முழுதும் முழுமை பெறவும் வழிபிறக்கும்.

## ஒளிவெள்ளத்தில் யாழ். நகரம்

யாழ்ப்பாண மாநகரத்திற்குநேற்று வந்திருந்தவர்கள் தாம் தவறி பாரிஸ்நகருக்கு தான் வந்துவிட்டோமோ என்று சந்தேகப் பட்டிருப்பார்கள்,

தெருவெல்லாம் தோரணம் இலைகளை மறைக்கும் வண்ணமின்சார வெளிச்சங்கள் எங்கும் வண்ணக் கலவை ஒளிபாய்ந்துஉள்ளத்தில் ஒரு புது ஒளியைப்பாய்ச்சிக் கொண்டிருந்தது.

தெருக்களெல்லாம் அழகின் திருவிளக்குகள்போல் அழகுமங்கையர் கூட்டமும் இளவாலிபர்களின் மிடுக்கு நடையும் சின்னஞ்சிறிசுகளை முன்னேவிட்டு பெரியவர்கள் நெரியட்டுவந்துகொண்டிருந்த காட்சியும் பார்ப்பதற்கு வெகுகவர்ச்சிகரமாக இருந்தது.

இருளும் புழுதியும் மண்டியிருந்த யாழ் நகரம்ஒளியும் கலகலப்பும் கவர்ச்சியும் நிறைந்து காணப்பட்டதைப் பார்க்க மனம் உண்மையில் குதூகலப்பட்டது எப்பொழுதும் இப்படி இந்த யாழ் நகரம் இருக்கக் கூடாதா என்று ஒரு அந்தரங்க ஆசை என் இதயத்தில் படர்ந்தது.

சுப்பிரமணியம் பூந்தோட்டம் மின்சாரவெளிச்சங்களால் பூத்துக்குலுங்கியது அப்படியே முன்னுலிருக்கும் நூல்நிலையத்துக்கு வந்தேன் அடாடா கலைமகள் நீரால் குளித்துக் கொண்டிருந்தாள் அவள் புன்சிரிப் புடன் வீணையில் மதுரமான இசையை மீட்டிக்கொண்டிருந்தது கேட்டது மகிழ்ச்சிவரும் பொழுது நாதம் மீட்கப்படுகிறது அந்தராகத்தைத் தான்இசைவாணி அப்போது மீட்டுக்கொண்டிருந்தாள்,

யாழ்ப்பாண மாநகர மண்டபம் எத்தனைகலை அம்சம்வாய்ந்த கட்டடம் என்பது நேற்றுத்தான் எனக்கு தெளிவாக விளங்கியது.

திறந்தவெளி அரங்கு மண்டபத்தின் மேல்தில்லை நடராஜன் திருநடனம் ஆடிக்கொண்டிருந்த காட்சி எவரையும் மெய்மறக்கச் செய்யும் ஆடிக்கொண்டிருந்த தில்லைநடராஜன் பரதநாட்டியத்தையும் கண்டியநடனத்தையும் புன்றுவலுடன்பார்த்துக் கொண்டிருந்தான்

யாழ்ப்பாண நகரம் இப்படியே இருக்க யாழ் மேயரும் அங்கத்தவர்களும் முயற்சி செய்தாலென்ன?

(கு வி ம

## குமாரசூரியரிடம் கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு 'வடக்கில் நிறுவ இருக்கும் பல்கலைக் கழகத்துக்கான வேலைகளை விரைவில் ஆரம்பிக்கும்படி ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கமய காங்கேசன்துறை கிளை அமைச்சர் திரு குமாரசூரியரை கோரியுள்ளது.

இக்கிளையின் விசேட கூட்டம் ஒன்று தெல்லிப்பழையில் திரு. ரி. பி. முருகையா தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் குமாரசூரியரை கோரும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## அமைச்சர் மைத்திரி தமிழில் பேசினார்!

யாழ்ப்பாணம், ஞாயிறு பதில் பிரதமரும், மின்சக்தி அமைச்சருமான திரு மைத்திரிபால சேனநாயகா யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய அலுவலகக் கட்டிடத்தைத் திறந்துவைத்துத் தமிழில் பேசும்போது முதல்தடவையாக இங்கு தமிழில் பேசுவதாகத் தெரிவித்தார்.

அமைச்சர் மைத்திரிபால சேனநாயகாவுடன் திருமதி சேனநாயகா, தபால் அமைச்சர் திரு எஸ் குமாரசூரியர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கே பி இரத்நாயகா ஆகியோர் வந்திருந்தனர். நரமண்டப வாசலில் மேயர் திரு ரி எஸ் துரைராசா பதில் பிரதமருக்கு மாலைசூட்டி வரவேற்ருர். இவ்வைபவத்தில் யாழ்ப்பாண எம் பி திரு சி எக்ஸ் மார்ட்டின், கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் திரு ஏ ஜி இராஜசூரியர் உட்பட நடைபாதையின் இருமருங்கிலும் நின்று அமைச்சரை வரவேற்ருர்கள.

மேயர் திரு துரைராசா பேசும்போது முற்போக்கான அரசாங்கத்தை தமிழ் மக்கள் எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்றும் இந்நாட்டில் எல்லோரும் ஒற்றுமைப்பட்டுச் சகோதரர் போல் வாழவேண்டுமென்று கூறினார்.

### சந்தேக நபர்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நபர்களை கைதுசெய்யவேண்டியிருப்பதால் பிணையில் விடக்கூடாதென்று பொலிசார் ஆட்சேபித்தனர்

மாஜிஸ்திரேட் இரு சந்தேகநபர்களையும் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 25-ம் திகதி வரை ஒத்திவைத்தார்

### ஒற்றுமை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்து வளமாக வாழ வேண்டுமானல் பழைய பிற்போக்கு நடைமுறைகளுக்கு ஒருசாவுமணி அடிக்கத்தான் வேண்டும் மேற்கூறிய புணரமைப்பு வேலைகளைச் செய்வதனுல் எமது நாட்டில் விவசாயவிருத்திக்கும், தொழில் விருத்திக்கும் இன்னபிற கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சிறந்தவொரு உயர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன்னேடியாக அமையும்

தெற்கின் மக்கள் சோஷலிசப்பாதையில் முன்னேடிகளாக முன்னேறிவருகிருர்கள் என்பதைக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன் வடக்கிலுள்ள மக்களுடன் ஒற்றுமைக்கரத்தை நீட்டி "வாருங்கள் வாருங்கள், ஒன்றுசேர்ந்துஉழைப்போம் என்று நேசக்கரம் நீட்டுபவர்களும் அவர்களே! வடக்கிற்கு மின்சக்தியை இணைப்பதானது அவர்களின் இந்த நல்லெண்ணத்திற்கு ஒரு பாலமென்றுகூடக் கூறலாம் ஒற்றுமைகூட இருபெரும் இனங்களையுத் இணைத்தே செல்கின்றன இவைகளைக் கருத்தில்கொண்டு உண்மையான ஒரு சோஷலிசத் திருநாடாக இந்நாட்டை ஆக்குவதற்கும் ஆண்டான், அடிமை, ஏழை, பணக்காரன், ஆதிய சமூக குறைபாடுகளை நீக்கி ஒற்றுமையான ஒரு ஸ்ரீலங்காவை உண்டாக்குவதற்கு நாம் பாடுபடுவோமாக.

ஒலிபரப்பு விசாரணை

## கமிஷன்முன் 300பேர் வாக்குமூலம்

கோட்டை, ஞாயிறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில விசாரணை கமிஷன் முன் 300 பேர் சாட்சியமளித்துள்ளனர். நேற்று முன்தினம் கமிஷனின் விசாரணை முடிவடைந்தது.

மேற்படி குழு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி மகாதேசாதிபதி திரு வில்லியம் கோபல்லாவினுல் நியமிக்கப்பட்டது. கொழும்பு யாழ்ப்பாணம் காலி கண்டி பதுளை மட்டக்களம்பு குருநாகல் இரத்தினபுரி ஆகிய இடங்களில் வாக்குமூலத்தை கமிஷன் பதிவு செய்துள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு தை மாதம் 18- திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது